விதைகள்

VOL 5 ISSUE 4

" புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும்,
உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு
மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும்
முன்பாக ஆயத்தம்பண்ணின உம்முடைய
இரட்சணியத்தை என் கண்கள் கண்டது"

லூக்கா 2:30-32

ஆசிரியர் கடிதம்

இறைமகன் இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த இதழ் கிறிஸ்மஸ் சம்பந்தமான ஆழமான படைப்புகளைக் கொண்டுள்ளது. திருமறையை திருப்ப திருப்ப புதிய ஊற்றுக்கள் திறக்கும் என்பதை எழுத்தாளர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். எழுதுகிற அத்தனை பேருக்கும் ஆயிரம் நன்றிகள்.

கிறிஸ்மஸ் என்பது கொண்டாடப்பட வேண்டியது. அன்று கிறிஸ்து பிறப்பை தூதர்கள் அறிவித்தார்கள்; அறிந்த மேய்ப்பர்களும் அறிவித்தே கடந்து சென்றார்கள். எனவே இந்த தலைமுறை மக்களுக்கு கிறிஸ்து பிறப்பு மற்றும் அதிலுள்ளநிகழ்வுகளை அறிவிப்பதற்கு, கிறிஸ்மஸ் பண்டிகை துணை செய்கிறது. எனவே கிறிஸ்மஸ் காலத்தை சரியாக பயன்படுத்தி வெறும் கொண்டாட்டங்களில் மட்டும் கவனம் செலுத்தாமல் நற்செய்தியை கடத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

புதிய ஆண்டு நெருங்குகிறது. ஆண்டவரிடத்தில் நெருங்கத் தீர்மானம் எடுத்தால் உங்கள் வாழ்க்கை சமாதானமாய் அமையும். அது போல மனிதர்களிடத்திலும் அன்பு, பகிர்வு, மன்னிப்பு போன்ற நற்குணங்களால் ஐக்கியத்தை வளருங்கள். கிறித்தவம் என்பது கடவுளிடமும் சக மனிதர்களிடமும் அன்பாயிருப்பதாகும்.

அன்புடன்
S. மெர்லின்
நல்ல நிலமாகு நண்பா மினிஸ்ட்ரீஸ் டிரஸ்ட்

வம்ச வரலாறு ---------- 03
நான்காவது ஞானி ---------- 19
நட்சத்திரம் எட்டிப் பார்த்து ---------- 31
யாருக்கானது கிறிஸ்மஸ் ---------- 32
பயணங்களில் பாடங்கள் ---------- 37
வார்த்தை மாம்சமானது ---------- 47
சங்கீதம் பாடுவோம் ---------- 59
எதற்காக பிறந்தேன் ---------- 66

நல்ல நிலமாகு நண்பா
மினிஸ்ட்ரீஸ் டிரஸ்ட்,
பதிவு எண் 52 /2023
16/76 வெட்டுக்காட்டுவிளை,
கண்ணனூர் - 629158,
கன்னியாகுமரி மாவட்டம்,
தமிழ்நாடு,
இந்தியா.
தொடர்பு +918668047378

மலர்க்குழு
S.மெர்லின்
J.ஜாண் டேனியேல்
Dr.அரவிந்த் ஜெயக்குமார்
J.ஜாக்குலின் ஷைன்
ஹில்டா பாக்கியராஜ்
K.S பிரசன்னா மெர்லின்
மின்னஞ்சல்(email)
nallanilamagunanbaministries@gmail.com

திருமறை ஆய்வு

Rev. ஜஸ்டின் தேவதாசன்
Former District Minister.
CSI KK Diocese

திருமறைப் பாடம்:
மத்தேயு 1:1–17
லூக்கா 3:23–38.



இயேசு கிறிஸ்துவின் வம்சவரலாறு

கிறிஸ்துவின் பிறப்புஎன்பது முன்னொரு காலத்திலே, ஒரு ஊரிலே என்று தொடங்கும் ஒரு புராண அல்லது இதிகாச கதை யல்ல. மாறாக இயேசுவின் பிறப்பு உலக சரித்திரத்திலே ஒரு நிகழ்வு. உலக வரலாற்றையே கி.மு, கி.பி, என தனக்குள் உள்ளட க்கிய ஒரு வரலாற்று உண்மை. உலகத்தில் சிறப்பு மிகுந்த எந்ததலைவர்களின்பிறப்பு, இறப்பு மற்றும் சாதனைகள் அனைத்து பதிவுகளும் கிறிஸ்துவின் வரலாற்றை மையமாகக் கொண்டே அடையாளம் பெறுகின்றன. மகா அலக்சா ந்தர் கி.மு 356-ல் பிறந்தார் என்றும் அகஸ்து ராயன் கி.பி 68-ம் ஆண்டு பிறந்தார் என்றும் கிறிஸ்துவின் பிறப்பினை வைத்தே அடையாளப் படுத்தப்பட்டு ள்ளனர்

மத்தேயு நற்செய்தியில் இயேசுவின் வம்ச வரலாறு இவ்விதமாய் தொடங்குகிறது:

"ஆபிரகாமின் குமாரனாகிய தாவீதின் குமாரனான இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு". இது ஆபிரகாமின் சந்ததியாருடைய வம்ச வர லாறு மட்டுமல்ல; இது நமது வம்ச வரலாறும் கூட. எப்படி யெனில் நமது ஆண்ட வராகிய இயேசு கிறிஸ் துவின் வழியாக நாமும் ஆபிரகாமின் சந்ததி எனும் சிறப்பினைப் பெற்றுள் ளோம். இதனைஅப்போஸ்த லராகிய பவுல் பின்வருமாறு கூறுகிறார்: "நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத் தத்தின்படியேசுதந்தரராயும்இருக்கிறீர்கள்" (கலா. 3:29). அப்படியானால் நமது வரலாறும் இவ்வரலா றுக்குள்ளே இடம்பெற்றி

ருக்கிறது என்பது நமக்கு எத்தனை பெருமை!

இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாறு மத்தேயு நற்செய்தி நூலிலும், லூக்கா நற்செய்தி நூலிலும் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன. இதர இரண்டு நற்செய்தி நூற்களிலும் தேவனுடைய குமார னாகிய இயேசு கிறிஸ்து என்று மாற்கு நற்செய்தி நூலிலும் (மாற்கு 1:1), வார்த்தையாக தேவனோடிருந்து, மாமிசமாகி கிருபையினாலும், சத்தியத் தினாலும் நிறைந்து, நம்முடனே வாசம் செய்த இயேசு என்று யோவான் நற்செய்தி நூலிலும் இயேசுவின் மானிட பிறப்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மத்தேயு நற்செய்தி நூலில் இயேசுவின் பிறப்பு விசுவாச தந்தை ஆபிரகாமிலிருந்து தொடங்கி, தாவீது மன்னன் வரையிலும் உள்ள 14 தலைமுறை பட்டியலும், பின்னர் தாவீது மன்னரின் காலத்திலிருந்து இஸ்ரவேலர் சிறைப்பட்ட காலம் வரைக்கும் உள்ள 14 தலைமுறை பட்டியலும், இறுதியாக சிறைப்பட்ட காலம் முதல் இயேசுவின் பிறப்பு வரையிலுமுள்ள 14 தலைமுறை பட்டியலும் ஆக 42 தலைமுறைகள் கொண்ட வம்ச வரலாறு பட்டியலிடப்பட்டுள்ளது. மத்தேயு நற்செய்தியின் ஆசிரியர் இயேசு கிறிஸ்துவின் சீடர்களுள் ஒருவரான மத்தேயு என்பவராவார் (மத். 9:9). இவருக்கு லேவி என்ற பெயரும் உண்டு (மாற்.2:14, லூக்.5:27). இவர் ஆயத்துறையில் பணியாற்றியவராகையால் புள்ளி விவரங்களை மிக நேர்த்தியாகப் பதிவு செய்துள்ளார். மத்தேயு நற்செய்தி நூல் யூதர்களுக்கென்று எழுதப்பட்ட நூல். எனவே தான் இயேசுவின் வம்ச வரலாற்றினை யூதர்களின் கோத்திரத் தந்தையாகப் போற்றிக் கொண்டாடப்படும் ஆபிரகாமிலிருந்து தொடங்கியுள்ளார். மேலும் மத்தேயு நற்செய்தி நூலின் உருவகம் சிங்கமாகும். சிங்கம் ஆளுகைக்கும் அதிகாரத்திற்கும் அடையாளமானது.

இயேசு கிறிஸ்து யூதா கோத்திரத்தின் சிங்கம் (வெளி. 5:5) எனத் திருமறை அவரைச் சுட்டிக்காட்டுகிறது. மட்டுமின்றி கோத்திரப் பிதாக்களுள் ஒருவரான யாக்கோபு தனது பிள்ளைகளை ஆசீர்வதிக்கும் காலத்தில் தனது 4-வது குமாரரான யூதாவை "யூதா பால சிங்கம், ... சமாதான கர்த்தர் வருமளவும் செங்கோல் யூதாவை விட்டு நீங்குவதுமில்லை, நியாயப் பிரமாணிக்கன் அவன் பாதங்களை விட்டு ஒழிவதுமில்லை; ஜனங்கள் அவரித்தில் சேருவார்கள்" என்று தரிசனப் பார்வையோடு ஆசீர்வதித்தார். அவ்வாறே யாக்கோபுவின் குமாரரான யூதாவின் பின்வாரிசுகளிலே தாவீது மன்னரானார். அவருக்குப்பின் அவரது வாரிசுகளும் மன்னராயினர். இவைகளை உணர்ந்திருந்த மத்தேயு இயேசுவின் வரலாறு பட்டியலிலே இவைகளை மிகப் பொருத்தமாக ஆவணப்படுத்தியுள்ளார். நிறைவாக யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான்; அவளித்தில் கிறிஸ்து என்னப்பட்ட இயேசு பிறந்தார் என்று தமது வம்ச வரலாறு பட்டியலை நிறைவு செய்து இயேசுவே யூதர்களுக்கு கடவுளால் வாக்குரைக்கப்பட்ட மேசியா; அவர் தேவகுமாரன் என்பதை மிக அழுத்தமாகப் பதிவு செய்திருக்கிறார்.

லூக்கா நற்செய்தி நூலில் சொல்லப்பட்ட வம்ச வரலாறு மத்தேயு நற்செய்தி நூலில் சொல்லப்பட்டதற்கு சற்று வித்தியாசமாக அமைந்துள்ளது. லுக்கா நற்செய்தி நூல் ஆசிரியர் லூக்கா என்பவராவார். இவர் பவுல் அப்போஸ்தலருடன் இணைந்து மிகுந்த ஆற்றலுடன் திருப்பணிவிடையில் பங்காற்றியவர். இவரே அப்போஸ்தலருடைய நடபடிகளையும் எழுதியவர் என திருமறைப் பண்டிதர்கள் அழுத்தமாக உரைக்கின்றனர். இவர் ஒரு மருத்துவர் மட்டுமல்ல புறசாதியினைச் சார்ந்தவர் என திருமறை ஆய்வாளர்கள் உரைக்கின்றனர்.

இவரது நற்செய்தி இயேசு புறசாதியாருக்கும் ஆண்டவர் என்பதை வலுவுடன் சுட்டிக்காட்டுகின்றது. மேலும் லூக்கா நற்செய்தியாளர் இயேசு கிறிஸ்துவிலிருந்து வம்சவரலாறைத் தொடங்கி முன்னோக்கி ஆபிரகாம் வரையிலும் சென்று அத்துடன் நிறைவு செய்யாதபடி அதற்கு முன்னாலும் வரலாற்றினுள்ளேநுழைந்து, நோவா, லாமேக்கு, மெத்தூசலா ஆகியோரையும் குறிப்பிட்டு ஆதாம் வரையிலும் சென்று ஆதாம் கடவுளின் குமாரன் (லூக். 3:38 -பொ.மொ) என வம்ச வரலாற்றை நிறைவு செய்திருக்கிறார். இதன் வழியாக இயேசு கிறிஸ்து கடவுளின் குமாரன், அவர் யூதர்களுக்கு மட்டுமல்ல புறசாதியாருக்கும் ஆண்டவர்; மரியாளிடத்தில் பிறந்த படியால் அவர் கடவுளின் குமாரன் மட்டுமல்ல மனிதகுமாரரும் கூட; ஆதாமின் தவறுகளைச் சீர்ப்படுத்தி உலகினை மீட்கப் பிறந்த இரண்டாம் ஆதாம் எனும் உண்மைகளை அழுத்தமாகப் பதிவு செய்கின்றார்.

ஆபிரகாம் முதல் இயேசு கிறிஸ்து வரையிலும் 42 தலைமுறைகளை மத்தேயுவும், 57 தலைமுறைகளை லூக்காவும் குறிப்பிடுகின்றனர். இந்த வேறுபாடு எப்படி வந்தது என்பதற்கு திருமறை அறிஞர்கள் பல காரணங்களைக் குறிப்பிடுகின்றனர். அவைகளைச் சுருக்கமாக அறிந்து கொள்ளுவோம்.

1. மத்தேயு தனது நூலில் இயேசுவின் வளர்ப்புத் தந்தையான யோசேப்பு வழியான தலைமுறைகளையும், லூக்கா தனது நூலில் இயேசுவின் இரத்த உறவு தாயான மரியாளின் வழியான தலைமுறைகளையும் பதிவு செய்துள்ளனர். எனவேதான் மத்தேயு நற்செய்தி வம்சமுறையில் தாவீது மன்னருக்குப்பின் அவரது மகனானசாலமோன்மன்னரின்பெயர்இடம்பெற்றுள்ளது. மாறாக லூக்கா நற்செய்தியாளரின் வரலாற்றில் தாவீது

மன்னருக்குப் பின்னர் அவரது இன்னொரு குமாரரான நாத்தானின் பெயர் (லூக். 3:31) கொண்டு வரப்பட்டுள்ளது.

2. மத்தேயு 14x3=42 தலைமுறைகள் என்பதில் மிக உறுதியாக இருந்துள்ளார். அக்காலத்தில் எண்களுக்கு மிகவும் முக்கியத்துவம் தரப்பட்டு வந்ததால் மத்தேயு அதனைக் கருத்தில் கொண்டிருக்கிறார் என நாம் புரிந்து கொள்ளலாம். 14 என்பது ஏழு என்பதன் இரு மடங்கு. ஏழு என்பது யூத மரபில் முழுமை தரும் எண். மேலும் யூத பாரம்பரியத்தில் மேசியாவை தாவீதுவின் குமாரன் என்றே அழைத்தனர். தீர்க்கதரிசனங்களும் அதை உறுதி செய்திருந்தன. தாவீதுவின் பெயர் மூன்று எபிரேய எழுத்துக்களைக் கொண்டது. டாலத், வௌ, டாலத் ஆகிய எழுத்துக்கள் அகர வரிசை முறையில் 4-ம், 6-ம், எழுத்துக்களாகும். இதன் கூட்டுத்தொகை 4+6+4=14 என்று வருகிறது. இதனை கருத்தில் கொண்டே 14 தலைமுறைகள் என 3 பிரிவாக 42 தலைமுறைகளை அவர் சுட்டிக்காட்டியுள்ளார். அப்படியானால் சில பெயர்களை அவர் தவிர்த்திருக்கலாம் என அறிய ஏதுவுண்டு. அக்காலத்தில் மகனுக்குப் பிறக்கும் குழந்தைகளைத் தந்தை தனது குழந்தைகளாக சுவீகரித்துக்கொள்ளும் மரபு இருந்துள்ளது. எடுத்துக்காட்டாக, யாக்கோபு யோசேப்பின் இரு பிள்ளைகளையும் தனது பிள்ளைகளாக சுவீகரித்துக் கொண்ட நிகழ்வு திருமறையில் சொல்லப்பட்டுள்ளது (ஆதி. 48:5). மத்தேயு இவ்வண்ணமாகச் சில பெயர்களைத் தவிர்த்து 42 தலைமுறைகளைப் பதிவு செய்துள்ளார் என அறிய ஏதுவுண்டு.

3. சில பெயர்கள் இரண்டு நற்செய்திகளிலும் முரண்பட்டுள்ளன. குறிப்பாக மத்தேயு நற்செய்தி நூலில் இயேசுவின் வளர்ப்புத் தந்தையாகிய யோசேப்புவின்

தந்தையின் பெயர் யாக்கோபு (மத். 1:16) என்றும், லூக்கா நற்செய்தி லூலில் யோசேப்புவின் தந்தையின் பெயர் ஏலி (லூக். 3:23) என்றும் சொல்லப்பட்டுள்ளது. இதற்கு தரப்படுகின்ற விளக்கம் என்னவென்றால், யூத பாரம்பரியத்தில் ஒருவன் திருமணம் செய்து சந்தானமில்லாமல் இறந்துவிட்டால் இறந்தவனின் சகோதரன் அவளைத் திருமணம் செய்து அவர்களுக்குப் பிறக்கும் குழந்தை மூத்த சகோதரனுடைய சந்ததியாகக் கருதப்படும் (ஆதி. 38:8). இந்தப் புரிதலின்படி யோசேப்புவின் தந்தையென இரு நற்செய்தி நூற்களிலும் சொல்லப்பட்டுள்ள யாக்கோபு, ஏலி என்பவர்கள் சகோதரர்களாயிருந்திருப்பார்கள் என்றும், மத்தேயு நற்செய்தியாளர் யூத பாரம்பரியத்தின்படியே மூத்த சகோதரரான யாக்கோபுவின் பெயரையும், லூக்கா நற்செய்தியாளர் இரத்த உறவு தந்தையான ஏலியின் பெயரையும் கொண்டு வந்துள்ளனர் என்றும் விளக்கம் தரப்படுகின்றது.

இயேசுவின் வம்ச வரலாறு உணர்த்தும் உண்மைகள்

1. மகிமைப்படுத்தப்பட்ட மா மனிதர்கள்:



மத்தேயு நற்செய்தியில் ஆபிரகாம் முதல் இயேசு கிறிஸ்து வரையிலும் 42 தலைமுறைகள் என்று அட்டவணைப்படுத்தப்பட்டிருந்தலும் ஆபிரகாம், தாவீது ஆகிய

இரண்டு பெயர்கள் மட்டுமே முதல் வசனத்தில் முக்கியப் படுத்தப் பட்டுள்ளன. ஏனெனில் இவர்கள் இருவருமே ஆண்டவரால் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டவர்கள். மட்டுமல்ல உலக மீட்பராகிய கிறிஸ்துவின் பிறப்பு இவர்கள் இருவருக்குமே முன்னறிவிக்கப்பட்டிருந்தது. கடவுளின் சாயலாகப் படைக்கப்பட்ட ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுந்த போதே மனுக்குலத்தின் மீட்பினை உறுதிப்படுத்தும் நியமத்தினையும் கடவுள் ஏற்படுத்தியிருந்தார். "ஸ்திரீயின் வித்தாகிய அவர் உன் தலையை நசுக்குவார்" (ஆதி. 3:15) என்று கடவுள் சாத்தானிடம் அறிவித்திருந்த வாக்குத்தத்தம் ஆபிரகாமின் அழைப்பிலிருந்து தொடங்குகிறது. "உன் சந்ததிக்குள் சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்" (ஆதி. 22:18) என்று ஆபிரகாமிடம் கூறியிருந்த வாக்குத்தம் கிறிஸ்துவைப்பற்றியதாகும். இதனைப் பவுலடிகளார் கலாத்திய திருச்சபைக்கு எழுதிய கடிதத்தில் "சந்ததிகளுக்கு என்று அநேகரைக் குறித்து சொல்லாமல் சந்ததி என்று ஒருவரைக்குறித்தே சொல்லப்பட்டுள்ளபடியால் அந்த சந்ததி கிறிஸ்துவே" (கலா. 3:16) என்று உறுதிப்படுத்துகிறார். மேலும் நாத்தான் தீர்க்கர் வழி ஆண்டவர் தாவீதுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் "நான் உனக்குப் பின்பு உன் கர்ப்பப்பிறப்பாகிய உன் சந்ததியை எழும்பப்பண்ணி அவன் ராஜ்யத்தை நிலைப்படுத்துவேன்..... அவன் ராஜ்யபாரத்தின் சிங்காசனத்தை என்றைக்கும் நிலைக்கப்பண்ணுவேன்" (2சாமு. 7:11–16) என்று கூறியிருப்பது தாவீதின் குமாரனாகிய சாலமோன் மன்னனை மட்டுமல்ல சாலமோனில் தொடங்கி கிறிஸ்துவில் முழுமை பெறுகிறது என்பதையும் நாம்

புரிந்து கொள்ளலாம்.

ஆபிரகாமின் பற்றுறுதி: நதிக்கு அப்புறத்திலே, கல்தேயர் நாட்டிலே அந்நிய தேவர்களைப் பணிந்து வாழ்ந்து வந்த ஆபிரகாம் தனது இறையழைப்பினைப் பெற்றார். "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" (ஆதி. 12:1) என்ற இறையழைப்பைப் பெற்றதும் ஆபிரகாம், தான் இதுவரையிலும் பணிந்து கொண்டிருந்த தமது குல தெய்வங்களை விட்டு விட்டு, தன்னை அழைத்த ஆண்டவரே உண்மையான கடவுள் என்பதை உணர்ந்து, சற்றுமே தடுமாற்றம் கொள்ளாமல் அழைப்புக்குக் கீழ்ப்படிந்தார். இதுவே அவரது விசுவாசப் பற்றுறுதி. பல்வேறு சூழல்கள் அவரது விசுவாசத்தினைக் குலைக்கும் அனுபவங்களாய் அமைந்திருந்தும் அவைகளிலே விழுந்து, மீண்டும் எழுந்து நிறைவாகத் தனது முதுமையிலே அருளப்பட்ட ஒரே புத்திர சந்தானத்தினையும் கடவுளுக்குப் பலியாக்கத் துணிந்து கடவுளின் விசுவாசச் சோதனையிலே வெற்றியடைந்து விசுவாசிகளின் தகப்பன் என்னும் சிறப்புக்குரிய வரானார்.

தாவீதுவின் பக்தி வைராக்கியம்: மந்தையினை மேய்த்துக் கொண்டிருந்த தாவீதுவை கடவுள் தமது மந்தையாகிய இஸ்ரவேல் மக்களை ஆளும் மன்னராகக் கடவுள் தெரிந்து கொண்டார். இஸ்ரவேலின் 12 கோத்திரங்களின் அரசனாக பொறுப்பிலிருந்தாலும் இறையுறவில் தாவீது அதிகமாய் நாட்டம் கொண்டு மிகுந்த பக்திவைராக்கியத்தினை வெளிப்படுத்தினார். கடவுளுக்கும் தனக்குமுள்ள உறவினை திருப்பாடல்களின் வழியாக வெளிப்படுத்தியிருக்கிறார். அவரது ஆலய வாஞ்சையினை அனேகம் சங்கீதங்களின் வழியாக வெளிப்படுத்தியுள்ளார்.

84-ம் சங்கீதத்தில் "சேனைகளின் கர்த்தாவே உமது வாஸஸ்தலங்கள் எவ்வளவு இன்பமானவைகள்! என் ஆத்துமா கர்த்த்தருடைய ஆலயப் பிராகாரங்களின் மேல் வாஞ்சையும் தவனமுமாயிருக்கிறது; என் இருதயமும், என் மாம்சமும் ஜீவனுள்ள தேவனை நோக்கிக் கெம்பீர சத்தமிடுகிறது" என்கிறார் (சங். 84:2,3).

ஆலயத்தின் மீதுள்ள தனது நாட்டத்தினை 'வாஞ்சை', 'தவனம்' என்ற கருத்தாழமிக்க இரு சொற்களால் வெளிப்படுத்துகின்றார். வாஞ்சை என்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள எபிரேய சொல்லில் பொருள் 'மந்த நிலையடைதல்' அல்லது 'வெளிறுதல்' என்பதாகும். ஆலயத்தின் மீது கொண்ட பாசத்தினிமித்தம் மந்த நிலையடைந்தேன் என்கிறார். இதனை எப்படி புரிந்து கொள்வது? தமிழ் இலக்கியத்தில் பசலை நோய் என்று ஒரு நோயினைக்குறித்து சொல்லப்பட்டிருப்பதைக் கேள்விப் பட்டிருப்போம். அதாவது மங்கை ஒருத்தியைக் கரம்பிடித்த அவளது கணவன் தூர தேசம் சென்று விடுகின்றான்; வெகு நாட்கள் அவனைக் காணாத படியால் அவள் துயரமடைகின்றாள்; அத்துயரத்தால் அவள் பொலிவிழந்து விட அவள் முகம் வெளிர் நிலையடைகிறது; இதுவே பசலை நோய். இப்படியொரு செய்தி உன்னதப்பாட்டின் புத்தகத்திலும் சொல்லப்பட்டுள்ளது. அதாவது, மணவாளனைக் காணாததால் துயரமடைந்த மணவாட்டி தன் தோழிகள் வழியாக ஒரு செய்தியைப்

மணவாளனுக்கு அனுப்புகிறாள்: "எருசலேம் குமாரத்திகளே! என் நேசரைக் கண்டீர்களானால், நான் நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன் என்று அவருக்குச் சொல்லும்படி உங்களை ஆணையிடுகிறேன்" (உன். 5:8) என வேண்டுகிறார். ஆங்கில திருமறையில் “I am sickening with love என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இவ்வாறே ஆலயத்தின் மீது தணியாத காதல் கொண்ட திருப்பாடகராகிய தாவீதுவும் ஆண்டவரைக் காணமுடியவில்லையே என்னும் சோகத்தால் உடலும் உள்ளமும் வாட்டமுற, தன் துயர நிலையினையே 'வாஞ்சை' என்னும் சொல்லால் இங்கு குறிப்பிடுகின்றார். அவர் பயன்படுத்திய இன்னொரு சொல் 'தவனம்'. இதன் பொருள் தணியாத தாகம் என்பதாகும். "என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ளதேவன் மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சன்னிதியில் வந்து நிற்பேன்?" (சங். 42:2) என்று தன்னுடைய தாகத்துக்கான காரணத்தையும் சொல்லுகிறார். இந்த தாகத்தின் ஆழத்தினை இன்னொரு சங்கீதத்தில் குறிப்பிடுகிறார்: "தேவனே நீர் என்னுடைய தேவன்; அதிகாலமே உம்மைத் தேடுகிறேன்; வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிறது" (சங். 63:1). தனது ஆத்துமாவை வறண்டதும், விடாய்த்ததும், தண்ணீரற்றதுமான நிலம் என்று குறிப்பிடுகிற திருப்பாடகர், இப்படிப்பட்ட பாலை நிலத்தில் எவ்வளவு தான் தண்ணீரை ஊற்றிக்கொண்டிருந்தாலும் அந்த நிலம் திருப்தியடையப் போவதில்லை. அவ்வாறே எத்தனை முறை ஆலயத்திற்கு சென்றிருந்தாலும், மீண்டும் மீண்டும் செல்லவேண்டும் என்ற தீராத தாகம் என்னுள் நிறைந்துநிற்கிறது என்று ஆண்டவர் தங்கும் ஆலயத்தின் மீதான தனது தாகத்தை வெளிப்படுத்துகிறார். இந்த பக்தி வைராக்கியத்தை நாம் தொடருகிறோமா?

2. மன்னித்து ஏற்கப்பட்ட இதர மனிதர்கள்:

இயேசுநாதருடைய வம்சவரலாற்றிலே மிகவும் உயர்வாகக்

குறிப்பிடப்பட்டுள்ள தலைவர்களின் வாழ்விலும் சில சிதைந்த தகவுகளும் காணப்படுகின்றன. இவைகள் மன்னிக்கப்பட்டு, இவர்கள் இயேசுவின் வம்சவரலாற்றினுள் இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆபிரகாம்: விசுவாச தந்தை என்று அழைக்கப்பட்டிருந்தாலும் சில இடங்களில் அவரது விசுவாச சலனங்களையும் காணமுடிகிறது. கடவுளின் வாக்குத்தம் நிறைவேறுவதற்கு பொறுமையோடு காத்திருக்க வேண்டிய ஆபிரகாம், தனது மனைவியாகிய சாராளின் ஆலோசனைப்படி எகிப்திலிருந்து கொண்டுவரப்பட்ட சாராயின் பணிப்பெண்ணாகிய ஆகாரைத் தனது மனைவியாக்கிக் கொண்டதும், ஆகார் வழியாகத் தனக்கு இஸ்மவேல் என்னும் குமாரன் பிறந்தபின் சாராய் அர்ப்பமாக எண்ணப்பட்டதால் சாராயின் ஆலோசனைப்படி, ஆகாரையும் இஸ்மவேலையும் ஒரு துருத்தி தண்ணீர் மட்டுமே கொடுத்து இல்லத்திலிருந்து அனுப்பி விட்டதும்,

மேலும் அந்நிய நாடுகளிலே சென்ற காலங்களிலே, தனது உயிரைக் காத்துக்கொள்வதற்காக இருமுறை தனது மனைவியைச் சகோதரி என்று கூறி தனது உடன்படிக்கை மனைவியினை மன்னர்களுக்குத் தாரைவார்த்து (ஆதி.

12:10-20; 20:1-18) உன்னதமான தமது இறையழைப்பின் சாட்சியை இழந்தவர்.

தாவீது: அவ்வாறே, 'தாவீதின் குமாரராகிய கிறிஸ்து' என்று மேசியாவின் பெயரையே தனது பெயருடன் இணைந்து நிற்கும் சிலாக்கியத்தினைப் பெற்ற தாவீது மன்னரும் தனது படையில் பணிபுரியும் ஏத்தியனாகிய உரியா என்பவருடைய மனைவியாகிய பத்சேபாவின்மீது இச்சையுற்று தனது அதிகாரத்தின் ஆற்றலால் அவருடன் முறைதவறி நடந்து, பின்னர் அவரைத் திருமணம் செய்வதற்காகத் தனது படைத்தளபதியாகிய யோவாபுடன் இணைந்து, சதித்திட்டம் நிறைவேற்றி, உரியாவினைக் கொன்று பின்னர் பத்சேபாவினைத் திருமணம் செய்து வேலியே பயிரை மேய்வது போல ஒரு மன்னருடைய மாண்பு நிலை தவறி இறை பக்தனுக்குரிய சான்று வாழ்விலிருந்தும் விழுந்து இறை திருவுளத்தையும்புண்படுத்தினவர் (2 சாமு. 11).

யாக்கோபு: இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் வரலாற்றிலே தவறுகள் மிகுந்த இன்னும் பலரது பெயர்கள் இணைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, கோத்திரத் தந்தையாகிய யாக்கோபு என்பவர் பிறப்பிலேயே எத்தன் என்னும் பெயரைப் பெற்றவர். தனது சொந்த சகோதரனையே அவர் பசியினைப் பயன்படுத்தி தான் சமைத்து வைத்திருந்த வாசனை மிகுந்த பயிற்றுக் கூழினைக் கொடுத்து அதற்குப் பதிலாக மிகவும் உயர்வான அவரது முதல் பிறப்பு சுதந்திரத்தை பறித்துக்கொண்டவர். மட்டுமின்றி, தனது தந்தையின் முதிர்வயதிலே, அவரது பார்வையின்மையினைப் பயன்படுத்தி, மூத்தமகனைப் போல் வேடமிட்டு, தந்தையினை ஏமாற்றி, மூத்தமகனுக்குரிய தந்தையின் ஆசீர்வாத்தைக் கவர்ந்து கொண்டவர்.

யூதா: யூதா என்பவர் கோத்திரத்தந்தையான யாக்கோபுவின் 4-வது மகனாவார். இவர் கானான் நாட்டுப் பெண்ணைத் திருமணம் செய்து மட்டுமின்றி தனது மூத்த மகனுக்கும் கானானியப் பெண்ணான தாமாரைத் திருமணம் செய்து வைத்தார். தாமார் தனது கணவனை இழந்து விட, இரண்டாவது மகனைத் திருமணம் செய்து கொடுத்து அவனும் இறந்து விட, யூத மரபின் படி அடுத்த மகனைத் திருமணம் செய்து கொடுக்காமல் ஏமாற்றி, அவன் வளரும் வரையிலும் அவள் கைம்பெண்ணாகவே வாழும்படிதாயின் இல்லத்திற்கு அனுப்பிவிட்டார். யூத மரபின் படி இது ஓர் மா பாதாகச் செயல். மட்டுமின்றி, ஆடுகளுக்குமயிர்கத்திரிப்பதைப்பார்வையிடுவதற்காகத் திம்னாவுக்குச்சென்றயூதா,விலைமாதர்கள்காத்திருக்கும் நீரூற்றுகளண்டையில் செல்ல, இதனை அறிந்த யூதாவின் மருமகள், தான் ஏமாற்றப்பட்டதால், கைம்பெண் ணிற்குரிய தனது முக்காட்டினைக் களைந்து, விலை மாதுவினைப் போல் அமர, இதனை அறியாத யூதா, தனது மருமகளிடமே விலைபேசி அவளுடன் உறவு கொண்டு இஸ்ரவேலிலே செய்யத்தகாத மதியீனத்தைச் செய்தவர்.

சாலமோன்: தாவீது மன்னரின் குமாரரரான இவர் தலை சிறந்த ஞானியாக இருப்பினும் இவரது தவறுகளால் நாடு அமைதி இழந்தது. இவர் ஓர் பெண் பிரியர். இவருக்கு 700 மனைவிகளும் 300 மறு மனையாட்டிகளும் இருந்ததாக திருமறையில் சொல்லப்பட்டுள்ளது (1இரா. 11:3). அவர்களில் பெரும்பாலானோர் புறசாதி பெண்களாவர். இவர்கள் மன்னரை அவரது விசுவாச வாழ்விலிருந்து விழச் செய்தனர். எனவே எருசலேமில் கடவுளுக்காக மிகப் பெரிய ஆலயத்தைக் கட்டிய இவர் அந்நிய தெய்வங்களுக்கும் ஆலயங்களைக் கட்டி, இறை தூய்மையிலிருந்து விழுந்தவர். இவரது பிள்ளைகள் வாரிசுரிமைக்காக சண்டையிட்டதால் இல்லத்தின்

அமைதியும் சிதைந்தது; வரிக்கொடுமைகளால் நாட்டின் அமைதியும் சிதைந்தது.

யோராம்: யோசபாத் மன்னரின் குமாரராகிய யோராம், தனது தந்தையின் மரணத்திற்கு பின்னர் அரசுரிமை பெற்று, தனது உடன் பிறந்த சகோதரர்களால் தனது அரச பதவிக்குஇடையூறுவரலாம்என்றுஎண்ணியபடியினாலே தன்னுடைய இரத்த உறவு என்றும் பாராமல் அத்தனை சகோதரர்களையும், சில பிரபுக்களையும் பட்டயத்தால் வெட்டிக் கொன்றவர் (2 நாளா. 21:4).

மனாசே: மனாசே என்பவர் இறை கருணையால் ஆயுளின் காலங்கள் கூட்டி வழங்கப்பட்ட எசேக்கியா மன்னரின் மைந்தன். இவர் எருசலேம் ஆலயத்திலேயே பலிபீடங்களைக் கட்டி, தன் குமாரனையும் தீக்கடக்கப் பண்ணி, அஞ்சனம் பார்க்கிறவர்களையும் குறி சொல்லுகிறவர்களையும் தன்னிடமாய் வைத்து இறை கோபத்தைப் பற்றியெரியச் செய்தவர்.

இவ்விதமாகப் பலர் தங்கள் வாழ்வின் தவறுகளினாலே தைலக்காரனின் உயர்ந்த வாசனைமிகுந்த தைலமாகிய இறைவாசனையை நாறடித்தனர். இப்படிப்பட்டவர்களும் இயேசுவின் பிறப்பின் வரலாற்றில் இணைக்கப்பட்டுள்ளனர்.

புனிதப்படுத்தப்பட்ட புறசாதிப் பெண்கள் :

நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் பெண்ணியம் பெருமைப்படுத்தப்பட்டுள்ளது எனபது ஆச்சரியமான உண்மையாகும். நான்கு பெண்களின் பெயர்கள் (தாமார், ராகாப், ரூத், பத்சேபாள்) வம்ச வரலாற்றினுள் கொண்டு வரப்பட்டுள்ளன. பொதுவாக யூத வம்ச வரலாறுகள் ஆண்கள் பெயரிலே

தான் பதிந்திருக்கும். ஆபிரகாம் ஈசாக்கைப் பெற்றான், ஈசாக்கு யாக்கோபைப் பெற்றான் என்றுதான் வம்ச வரலாறுகள் எழுதப்படும். அத்தகைய ஆணாதிக்கம் மிகுந்திருந்த அந்த கலாச்சார பாரம்பரியத்திலே பெண்கள் பெயர்கள் எழுதப்படுவது விந்தையான ஒரு காரியமே. அதிலும் மேற்குறிப்பிட்ட அந்த நான்கு பெண்களும் யூத இனத்தைச் சார்ந்தவர்களல்ல; மாறாக புறசாதிப் பெண்கள். தாமார் கானான் நாட்டினைச் சார்ந்த பெண் (ஆதி. 38:6); ராகாபும் அவ்வாறே கானானியப் பெண்மணி (யோசுவா 2:1); ரூத் மோவாப் நாட்டினைச் சார்ந்தவள் (ரூத் 1:4); பத்சேபாள் ஏத்தியப் பெண்மணி (2 சாமு. 11:3). மட்டுமின்றி இவர்கள் நான்கு பேருமே ஆணாதிக்கத்தால் சிதைந்தவர்கள். தாமார் தனது கணவர் இறந்துவிட்ட சூழலில் தனது கணவனின் தந்தையால் கருவுற்றவள்; ராகாப் வேசியாக்கப்பட்டவள். அவளது பெயருடன் வேசி என்ற பட்டப்பெயரும் இணைந்தே அவள் அழைக்கப்பட்டிருந்தாள் (யோசு. 2:1); ரூத் கணவன் இறந்துவிடவே மாமியுடன் கணவரின் ஊரான பெத்லகேமுக்கு வந்து இறையருளால் போவாஸ் என்னும்

மனிதருக்கு வாழ்க்கைப்பட்டவள்; பத்சேபாளின் கணவன் உரியா தாவீது மன்னனின் இச்சையால் வஞ்சகமாகக் கொல்லப்பட, பின்னர் தாவீது மன்னுக்கு மனைவியானவள். புறசாதிப் பெண்களின் பெயர்கள் தங்களது வம்ச வரலாற்றிற்குள் இணைக்கப்படுவதை யூதர்கள் விரும்புவதேயில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில் புறசாதிகள் நரகிலே எரியும் அக்கினியில் போடப்படும் விறகுகள் என்று கருதப்பட்டவர்கள். அப்படிப்பட்டவர்களின் பெயர்கள் இயேசு கிறிஸ்துவின் பிறப்பின் வரலாற்றில் இடம் பெற்றிருக்கிறது என்பது மத்தேயு நற்செய்தி ஆக்கியோனின் துணிச்சல் என்பதைவிட இதனை எழுதும்படி தூய ஆவியானவர் ஆற்றல்படுத்தியிருக்கிறார் என்பதுவே உண்மை. இப்படிப்பட்ட விழுந்து போன, சிதைந்து விட்ட பெண்களின் உதிரப்பிறப்பாய் தோன்றுவதற்கு ஆண்டவர் வெட்கப்படாதபடி தமது பிறப்பால் இவர்களைப் புனிதப்படுத்தியிருக்கிறார் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

மட்டுமல்ல இப்படிப்பட்ட இழிந்தவர்களையும் தமது பிறப்பின் திட்டத்துக்குள்ளே கொண்டுவந்திருக்கிறார் என்பது எத்தனை பொருந்தன்மையான ஒரு காரியம்! கிறிஸ்துவுக்குள் யூதன் -கிரேக்கன், அடிமை-சுயாதீனன், ஆண்-பெண் என்ற வேறுபாடுகள் இல்லை. அனைவரும் அவருக்குள் ஒன்றாயிருக்கிறோம் (கலா. 3:28). தண்ணீரானது உயரத்திலிருந்து தாழ்வுக்கு நேராய பாய்ந்து செல்வது போல கிறிஸ்துவின் ஆழமான அன்பு அடித்தளத்திலிருக்கும் மக்களிடமாய் பாய்ந்து செல்லுகிறது என்பதற்கு இயேசுவின் வம்ச வரலாறு எத்தனை ஆணித்தரமான சான்று? ஒரு பாடத்தினையும் இதிலிருந்து நாம் கற்றுக்கொள்ளுகிறோம். நமது வம்ச வரலாற்றிலும் நெரிந்து போனவர்கள், அடையாளம் இழந்தவர்கள், வாழ்வின் போராட்டங்களிலே

நின்றுகொள்ள முடியாது துவண்டு போய் விட்டவர்கள் மீது கிறிஸ்துவின் பிரவாகமான அன்பு நமது கரிசனைப் பணிவிடைகளாய் பாய்ந்து அவர்களும் உரிய அடையாளமும் அங்கீகாரமும் பெற ஆவன செய்ய கிறிஸ்துவின் கருவிகளாய் செயல்பட அழைக்கப்படுகிறோம்.

சேவியர்
சென்னை

“த ஸ்டோரி ஆஃப் அதர் வைஸ் மேன்”
(இன்னொரு ஞானியின் கதை) என்பது 1895ம் ஆண்டு ஹென்ரி வான் டைக் என்பவர் எழுதிய பிரபலமான கதை. கிறிஸ்தவ சிந்தனைகளை உள்வாங்கி எழுதப்பட்ட ஒரு புனைக்கதை இது என்பது குறிப்பிடத் தக்கது.

அர்டபான் என்றொரு வானியல் ஞானி இருக்கிறார். அவர் பழங்கால பெர்சியாவிலுள்ள எக்பட்டானா எனும் நகரில் வசித்து வருகிறார். நல்ல கற்றறிந்த மனிதர். கஸ்பார், மெல்கியர், பெல்தாச்சர் எனும் மூன்று ஞானிகளைப்போல இவரும் வானத்தை ஆராய்வதில் வல்லவர் (இந்த மூன்று பேரும் இயேசுவை சந்திக்கச் சென்ற சாஸ்திரிகள்). அர்டபானின் கண்களுக்கும் வானத்தில் மின்னிய நட்சத்திரம் தென்படுகிறது. அவர் அதை ஆராய்கிறார். பழைய ஏட்டுச் சுருள்களையெல்லாம் எடுத்துப் புரட்டிப் பார்க்கிறார். உலகில் ஒரு மாபெரும் அரசர், மீட்பர் பிறந்திருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்கிறார்.

அந்த அரசனைக் காணவேண்டும், அவரைப் பணிய வேண்டும் என இவருடைய மனதுக்குள் ஆழமான ஒரு தாகம் உருவாகிறது. எப்பாடு பட்டாவது அவரைப் போய்ப் பார்க்கவேண்டும் அவருக்கு நல்ல பரிசுகளைக் கொடுக்க வேண்டுமென முடிவெடுக்கிறார். தனது சொத்துகளையெல்லாம் விற்று ஒரு நீலமணி, ஒரு மாணிக்கம், ஒரு முத்து என மூன்று பரிசுகளை வாங்குகிறார். நீலமணி சொர்க்கத்தின் ஜுவாலை போல ஜொலிக்க, மாணிக்கம் ஒரு துளி இரத்தச் சிவப்பாய் உயிருடன் சிரிக்க, ஒளிரும் முத்து அன்பையும் தியாகத்தையும் குறிப்பால் உணர்த்த அவர் மகிழ்கிறார். நல்ல பரிசுகளை வாங்கியாகிவிட்டது இனிமேல் பயணம் செய்ய வேண்டியது தான் என முடிவெடுக்கிறார்.

இந்தப் பயணத்தைத் தனியாய் நடத்த முடியாது என நினைத்தவருக்கு மூன்று ஞானிகள் பயணம் செய்ய ஆயத்தம் செய்து கொண்டிருக்கும் தகவல் வருகிறது. அவர்கள் போர்சிப்பா எனும் நகரில் இருக்கிறார்கள். அவர்களோடு இணைந்து யூதேயா செல்ல

முடிவெடுக்கிறார். இவருக்கும் அவர்களுக்கும் இடையே பத்து நாள் பயணத் தொலைவு இருக்கிறது. நட்சத்திரம் நகர்ந்து கொண்டே இருப்பதால், விரையில் பயணத்தை ஆரம்பிக்கவில்லையேல் இலக்கைச் சென்றடைய முடியாது எனும் பதட்டமும் அவருக்குள் இருந்தது.

அர்டபான் பாலை நிலத்தின் வழியாகவும், பெர்சியாவின் மலைகள் வழியாகவும் தனது பயணத்தை நடத்துகிறார். ஆபத்துகள் நிறைந்த பயணம். இரவில் வானின் நட்சத்திரம் அவருக்கு வெளிச்சம் காட்டுகிறது. பகலில் சூரியன் சுட்டெரிக்கிறான். பத்து நாளுக்குள் இலக்கை அடைய வேண்டும் என துரிதமாய் குதிரையை ஓட்டுகிறார் அவர்.

பரிசுகளைப் பத்திரமாய்ப் பாதுகாத்தபடி, ஒரு மீட்பரைத் தரிசிக்கும் ஆவலில் அவர் விரைந்து கொண்டிருக்கிறார். பத்தாவது நாள் வருகிறது. இதோ விரைவில் நகரை எட்டிவிடலாம். போர்சிபாவை அடைந்து விட்டால் மற்ற ஞானிகளுடன் இணைந்து விடலாம் எனும் குதூகலத்துடன் அவர் பயணிக்கிறார்.

அப்போது, வழியில் ஒரு மனிதர் தெருவோரமாய் விழுந்து கிடப்பதை அவர் கண்டார். அந்த மனிதர் கடுமையான காய்ச்சலில் நடுங்கிக் கொண்டிருந்தார். அவருடைய கண்களில் பசியும், வலியும் மிதந்தன. விரைவில் அவர் இறந்து விடுவார் என்பது அர்டபானுக்குப் புரிந்தது. அவரை கண்டும் காணாமலும் செல்ல அவரால் முடியவில்லை. குதிரையை விட்டு இறங்கி அவரின் அருகே செல்கிறார்.

அவரது மனதில் கடுமையான போராட்டம். இந்த மனிதருக்கு உதவி செய்யப் போனால், மற்ற ஞானிகளை சரியான நேரத்தில் சந்திக்க முடியாமல் போகலாம்.

அப்படி நடந்தால் மீட்பரைத் தரிசிக்கும் வாய்ப்பு கிடைக்காமலேயே போகலாம். தனது ஆர்வம், கனவு, இலட்சியம் எல்லாம் கரைந்தே போகலாம். என்ன செய்வது? அவருக்குள் மாபெரும் குழப்பம். கடைசியில் அவர் முடிவெடுக்கிறார். அந்த ஏழை மனிதருக்கு உதவி செய்வோம், மற்றதை பின்னர் பார்த்துக் கொள்ளலாம் !

தனக்குத் தெரிந்த வைத்தியத்தை அவருக்குச் செய்கிறார். மூலிகைகளைக் கொண்டு அவருக்கு மருந்து உருவாக்குகிறார். அவருக்கு உணவும் தண்ணீரும் கொடுக்கிறார். அவர் படுக்க வசதி செய்து கொடுக்கிறார். அவரோடு தங்கி ஆறுதல் வார்த்தைகளைச் சொல்கிறார். அந்த மனிதர் நலமடையும் வரை அவருடனே அவர் நாட்களைச் செலவிடுகிறார்.

அந்த மனிதர் நலமடைந்து அர்டபானை வாழ்த்தினார். நான் மரணத் தருவாயில் இருந்தேன் நீர்தான் என்னைக் காப்பாற்றினீர். ஆபிரகாமின் தேவன் உங்கள் பயணத்தை ஆசீர்வதிக்கட்டும் என வாழ்த்தினார். அர்டபான் மகிழ்ச்சியும், துயரமுமாக எழுந்தார். ஒரு உயிரைக் காப்பாற்றிய மகிழ்ச்சி ஒரு புறம், ஒரு மாபெரும் வாய்ப்பை நழுவ விட்டோமோ எனும் துயரம் ஒரு புறம். அங்கிருந்து விரைவாக போர்சிபா நகருக்குச் செல்கிறார்.

அவருக்கு மிகப்பெரிய ஏமாற்றம் அங்கே காத்திருந்தது. ஞானிகள் ஏற்கனவே கிளம்பிவிட்டார்கள். இனிமேல் தனியாகத் தான் பயணப்பட வேண்டும். அதற்கு

தன்னுடைய குதிரை போதுமானதாக இருக்காது. எனவே பயணத்துக்குத் தேவையான ஒரு ஒட்டகமும், அதில் போடவேண்டிய பொருட்களும் எல்லாம் வாங்கினார். நெடுந்தூர பயணத்துக்கானவற்றை வாங்குவதற்கு அவரிடம் பணமில்லை. மீட்பருக்குப் பரிசளிக்க வைத்திருந்த பரிசுகளில் ஒன்றான நீலக்கல்லை தியாகம் செய்ய அவர் முடிவெடுத்தார். அப்படி நீலக்கல்லை விற்று பயணத்துக்கான ஏற்பாடுகளைச் செய்தபின் பயணத்தைத் தொடங்கினார்.

அவர் ஏற்கனவே ஏட்டுச் சுருள்களையும், மெசியாவின் வருகை குறித்த பதிவுகளையும் படித்திருந்ததால் நேராக பெத்லேகேமுக்குப் பயணமானார். நீண்ட நெடிய பயணத்தின் முடிவில் அவர் பெத்லேகேமை வந்தடைந்தார்.

பெத்லேகேமின் தெருக்களெங்கும் அலைந்து திரிந்தார். மீட்பரைப் பற்றிய தகவல் எங்கேனும் கிடைக்கிறதா என தேடிக்கொண்டிருந்தார். ஏதாவது அதிசயமான பிறப்பு நடந்ததா, ஏதேனும் அடையாளங்கள் தெரிந்ததா என்றெல்லாம் அவர் வீடு வீடாகச் சென்று மக்களிடம் கேட்டார். மக்கள் மூன்று ஞானிகள் ஊருக்கு வந்திருந்ததையும், அவர்கள் ஒரு குழந்தைக்கு பொன் தூபம் வெள்ளைப் போளம் பரிசளித்ததையும் சொன்னார்கள். அவருக்குப் புரிந்தது இது தான் தெய்வக் குழந்தை !

அந்தக் குழந்தை எங்கே ? எங்கே போனால் பார்க்கலாம் என பரவசத்துடன் கேட்டார் அர்டபான். அவருக்கு அதிர்ச்சிச் செய்தியே கிடைத்தது. குழந்தை ஏற்கனவே எங்கோ சென்று விட்டது. அந்த செய்தி அவரை உடைத்தது. இனி என்ன செய்வதென தெரியவில்லை. எப்படியாவது

மீட்பரைக் கண்டடைய வேண்டும். அவர் எங்கே சென்றார் என தெரியவில்லை என குழம்பினார்.

அப்போது பெத்லேகேமில் ஏரோதின் படை வீரர்கள் வந்தார்கள். ஊரெங்கும் பரபரப்பு தொற்றிக் கொண்டது. படைவீரர்வந்துஅங்கேஒருகுழந்தையைக்கொன்றார்கள், இங்கே ஒரு குழந்தையை வெட்டினார்கள், எல்லா குழந்தைகளையும் கொல்வார்களாம்.. என்றெல்லாம் ஊரில் திகில் செய்தி பரவியது. மகிழ்ச்சியையும், அமைதியையும், நம்பிக்கையும் தேடி வந்த அர்டபான் அதிச்சிச் செய்திகளால் நிலைகுலைந்தார்.

அப்போது அந்தத் தெருவில் ஏரோதின் வீரன் ஒருவன் வந்தார்கள். ஒரு தாய் தன் குழந்தையை இறுக அணைத்தபடி பயத்தின் உச்சியில் வெல வெலத்து நின்றாள். அதோ அந்தப் படைவீரன் வருவான், என் குழந்தையைப் பறித்து என் கண் முன்னே வெட்டித் துண்டாக்கி எறிவான் என அவளது மனம் பேரச்சத்தில் நிலைகுலைந்தது.

அந்த வீரன் அவளை நெருங்கினான். குழந்தையை அவளுடைய கைகளிலிருந்து பிடுங்க முயன்றான். அந்தத் தாய் உலகமே அதிரும் வண்ணம் கதறி அழுதாள். அவனை கெஞ்சினாள். குழந்தைக்குப் பதிலாய் வேண்டுமானால் என் உயிரை எடுத்துக் கொள் என மன்றாடினாள். வீரன் கருணை காட்டவில்லை.

அர்டபான் விரைந்து சென்று அந்த வீரனுக்கும் தாய்க்கும் இடையே நின்றான். கையை நீட்டினார். கையில் மாணிக்கம் இருந்தது. மீட்பருக்குக் கொடுக்க தனது சொத்தையெல்லாம் விற்று வாங்கிய மாணிக்கம்.

இதோ இதை எடுத்துக் கொண்டு அந்தக் குழந்தையை விட்டு விடுங்கள். அவர் மன்றாடினார். வீரன் மாணிக்கத்துக்கு மயங்கினான். அதை வாங்கிப் பார்த்தான். உண்மையான மாணிக்கம். விலை மதிப்பற்ற மாணிக்கம். தனது வாழ்நாள் முழுவதும் உழைத்தாலும் இத்தகைய ஒரு மாணிக்கத்தை வாங்கவே முடியாது என அவனுக்குப் புரிந்தது. அவன் கண்கள் பேராசையினால் கொழுந்து விட்டெரிந்தன.

‘இவள் யார் உன் மனைவியா?’

இல்லை இவள் யாரென்றே எனக்குத் தெரியாது. ஆனாள் அவளது அழுகை என்னை உடைத்தது. எனவே அவளுக்கு ஆறுதல் அளிக்க விரும்பினேன் என்றார் அர்டபான். அவன் குழப்பமாய் அவரைப் பார்த்தபடி மாணிக்கத்துடன் விடை பெற்றான். தாய் அர்டபானின் கால்களில் விழுந்து அழுதாள். பின் குழந்தையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் ஓடினாள்.

மீட்பரையும் பார்க்க முடியவில்லை, இரண்டாவது பரிசுப் பொருளும் செலவாகிவிட்டது எனும் சிந்தனையும் அன்றிரவு அவர் அங்கே தங்கினார். உலகிற்கு சமாதானம் கொண்டு வந்த ஒரு மாபெரும் மீட்பரை, அரசரைக் காண முடியவில்லையே. தனது பயணம் தோல்வியடைந்து விட்டதே என்றெல்லாம் அவர் கலங்கினார்.

இருந்தாலும் அவருக்குள் இருந்த நம்பிக்கை வற்றிப் போகவில்லை. எப்படியும் மீட்பரைக் காண்பேன் எனும் உறுதி அவருக்குள் உயிர்ப்புடன் இருந்தது.

அங்கிருந்து அவர் ஒவ்வொரு இடமாக அலைந்து திரிந்தார். கிராமங்கள், நகரங்கள், பக்கத்து ஊர் எல்லா இடங்களிலும்

அலைந்தார். எகிப்து, கிரேக்கம் என எல்லா இடங்களிலும் சென்றார்.

முப்பது ஆண்டுகள் கடந்து விட்டன. இயேசு பணிவாழ்வுக்குள் நுழைந்து பரபரப்பாய் இயங்கிக் கொண்டிருந்தார்.

நான்காவது ஞானியின் தாகமும் தேடலும் நிற்கவில்லை. ஒரு போதகர் இருக்கிறார், அவர் எல்லோருக்கும் நலமளிக்கிறார் என்றெல்லாம் மக்கள் சொல்லும்போது அந்த இடத்துக்கு விரைவார். அவர் அங்கே சென்று சேரும் முன் போதகர் அவ்விடம் விட்டு விலகியிருப்பார். ஆனால் மக்கள்அவரைப்பற்றியகதைகளையும்,புதுமைகளையும், போதனைகளையும், உவமைகளையும் அவரிடம் சொல்வார்கள். அதையெல்லாம் கேட்டு மீண்டும் பயணத்தைத் தொடர்வார்.

இந்த முப்பது ஆண்டுகளும் அர்டபான் தனது பயணத்தின் போது ஏராளமான மக்களுக்கு உதவிகளைச் செய்தார். அவரது பயணத்தில் அனைத்தையும் இழந்த ஏழைகள், பரிவு காட்ட ஆளில்லாத விதவைகள், அநீதியாக சிறைப்பட்ட மக்கள், வாழ வழியில்லாத குடும்பங்கள் என பலரைச் சந்தித்தார். அவர்களுக்கு தன்னால் ஆன உதவிகளைச் செய்தார்.

நோயாளிகளுக்குப் பரிவு காட்டினார். தனது மருத்துவ அறிவினால் பலரைக் குணமாக்கினார். மக்களின் துயரங்களில் ஆறுதலளித்தார். அந்த பகுதி மக்களுக்கு அவர் பரிச்சயமான நபராய் மாறியிருந்தார். அவருடைய பயணம் அவரை பக்குவப்பட்ட நபராய். மாற்றியிருந்தது. ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும் ஆன்மிக ஆழம் அவருக்குள் எழுந்திருந்தது.

இப்போது அவருக்கு வயதாகிவிட்டது. பழையது போல ஓடியாட முடியவில்லை. ஆனாலும் உள்ளுக்குள் எரிந்து கொண்டிருந்த நெருப்பு அணையவில்லை. அந்த இரவில் ஒரு இடத்தில் நெருப்பு மூட்டி அதன் முன்னால் அமர்ந்திருந்தார்அர்படான்.அவரதுகைகளில்கடைசியாய் மிஞ்சிய அந்த முத்து இருந்தது. அதையேனும் அரசருக்குப் பரிசளிக்க முடியுமா என அவர் ஏங்கினார்.

கடைசியாக அவர் எருசலேமுக்கு வந்தார். அது பாஸ்கா விழாக் காலம். நகர் முழுவதும் மக்கள் பல ஊர்களிலிலுமிருந்து விழாவுக்காக வந்திருந்தனர். நசரேயனாகிய இயேசு என்றொரு நபர் வந்திருக்கிறார். அவர் ஆலயத்தின் மீதும் அதிகாரம் காட்டுகிறார். அதிசயச் செயல்களைச் செய்கிறார், எனும் மக்களின் பேச்சு அவரை உற்சாகப்படுத்தியது. தான் தேடிக்கொண்டிருக்கும் மீட்பர் இவர் தானோ ? என அவரது உள்ளம் பரபரத்தது.

எருசலேம் தெருக்களில் விரைந்தார். அப்போது மக்கள் சொன்னார்கள், ‘இயேசுவா… அவரை கொல்றதுக்காக கொல்கொதா கொண்டு சென்றார்களே! அர்டபானின் இதயம் புதைகுழியில் சிக்கிக் கொண்ட அவஸ்தை. இத்தனை நீண்ட நெடிய காலங்கள் தேடியதன் முடிவு அவரை சிலுவையில் சந்திப்பதா என பதறினார். இருந்தாலும் தன்னிடம் இருக்கும் முத்தைக் கொண்டு இயேசுவைக் காப்பாற்றி விட முடியுமா என கடைசி முயற்சி எடுக்க வேண்டும் என நினைத்தார்.

கொல்கொதாவை நோக்கி ஓடினார். அப்போது ஒரு பெரும் அழுகுரல் அவரது காதை அறைந்தது. நின்றார். ஒரு பெண்ணை ஒருவர் தெருவழியே இழுத்துச் சென்று கொண்டிருந்தார். அவளது ஆடைகள் கிழிந்திருந்தன. தரையில் உரசி உரசி அவளது உடலில் இரத்தக் காயங்கள்.

ஆனால் கொஞ்சமும் மனிதாபிமானம் இல்லாமல் அவன் அவளை இழுத்துச் சென்று கொண்டிருந்தான். அவளோ என்னை விட்டு விடுங்கள் விட்டு விடுங்கள் என கெஞ்சிக்கொண்டிருதாள். அவள் அடிமையாய் கொண்டு செல்லப்பட்ட பெண்.

அர்டபான் அவளிடம் சென்று விசாரித்தார். அவள் அழுதாள். குடும்பத்தின் கடனுக்காக தான் அடிமையான விஷயத்தைச் சொன்னாள். அவளது கண்ணீர் அவரை நிலைகுலைய வைத்தது. அவனோ அர்டபானை முறைத்தான். அவளுக்குரிய கடனை அடைக்காமல் அவளை விட்டு விடப் போவதில்லை என உறுதியாய்ச் சொன்னான்.

கடைசியாய் அர்டபான் முன்னால் ஒரு கேள்வி. தன்னிடம் இருப்பது ஒரே ஒரு முத்து! அதை மீட்பருக்காய் வைத்திருக்க வேண்டுமா ? இல்லை இவளை மீட்பதற்காய் செலவிட வேண்டுமா. கடைசியில் அவருடைய இரக்கமே வென்றது. அந்த முத்தை எடுத்து அவனிடம் கொடுத்தார். அவளை விட்டு விடு, இந்த முத்தை வைத்துக் கொள் என்றார். அந்த முத்தைப் பார்த்தவனின் கண்கள் விரிந்தன. அது விலைமதிப்பற்றது என்பதை அவன் உணர்ந்தான். உடனே அவளை விடுதலை செய்தான். அந்தப் பெண் நன்றியுடன் அர்டபானின் கால்களில் விழுந்து அழுதாள். அவர் அவளுக்கு வாழ்த்து சொல்லி அனுப்பி வைத்தார்.

தன்னிடம் இருந்த மூன்று பரிசுகளும் செலவாகிவிட்டன. கடைசி கட்டத்தில் மீட்பரைச் சந்திக்கவும் முடியவில்லை. தனது பயணம் மிகப்பெரிய தோல்வியில் முடிந்து விட்டதே என அவர் கலங்கினார்.

திடீரென வானம் இருண்டது... ஊரே இருளில் மூழ்கியது.

மிகப்பெரிய நிலநடுக்கம் வந்தது. கட்டிடங்கள் உடைந்து விழுந்தன. அர்டபானின் அருகே நின்றிருந்த கட்டிடம் அவர் மேல் விழுந்து அவரை நசுக்கியது. அவர் கண்கள் மெல்ல மெல்ல இருளடைய, எலும்புகளெல்லாம் உடைய கடவுளே ... என்னால் மெசியாவை முக முகமாய்ப் பார்க்க முடியாமல் போகிறதே என கலங்கினார்.

அப்போது ஒரு மென்மையான, தெளிவான, தீர்க்கமான, தெய்வீகக் குரல் அவரைச் சுற்றி ஒலித்தது. அந்த குரலில் அன்பும், கருணையும் நிரம்பி வழிந்தது. அவரது ஆன்மாவுக்குள் அந்தக் குரல் வெளிச்சத்தை ஊற்றி நிரப்பியது.

அர்டபான்... அந்தக் குரல் அழைத்தது.

உண்மையாகவே நான் உனக்குச் சொல்கிறேன். சின்னஞ் சிறிய சகோதரர்கள் ஒருவருக்கு நீ செய்த அன்பின் செயல்களெல்லாம் எனக்குச் செய்ததே.

அந்தக் குரலில் தெளிவும் நேர்த்தியும் அதிலிருந்த மாபெரும் உண்மையும் அர்டபானை மகிழ வைத்தது. அவர் காலம் முழுதும் தேடிக்கொண்டிருந்த மெசியா, அவர் உதவி செய்த எல்லா நபர்களிலும் இருந்திருக்கிறார் எனும் உண்மை அவருக்குப் புரிந்தது.

அந்தப் புரிதல் அவருக்குள் சொல்ல முடியாத நிம்மதியைக் கொண்டு வந்தது. தனது பரிசுகளையெல்லாம் மீட்பர் ஏற்றுக் கொண்டிருக்கிறார் எனும் உண்மை அவரை மகிழ வைத்தது.தான் விரும்பியபடி அந்தப் பரிசுப் பொருட்களை மீட்பருக்குக் கொடுக்க முடியவில்லை, ஆனால் இறைவன் விரும்பியபடி அதை பெற்றுக் கொண்டிருக்கிறார் என்பது அவருக்குள் நிம்மதியை விதைத்தது. இரக்கமும், அன்புமே

இறைவனுக்குஅளிக்கக்கூடியமிகஉயர்ந்தகாணிக்கைகள் என்பதை அவர் கண்டு கொண்டார்.

அவர் தனது கடைசி மூச்சை இழுத்தார். அவரது ஆன்மா அவரது உடலில் இருந்து எடுத்துக் கொள்ளப்படுவதை அவர் உணர்ந்தார். தான் தேடி நடந்தவர், தன்னைத் தேடி வந்து அழைத்துச் செல்வதாய் அவர் உணர்ந்தார்.

அவரது பயணம் நிறைவுற்றது. அவர் நினைத்தது போன்ற ஒரு சந்திப்புடன் அது நிறைவு பெறவில்லை. ஆனால் வழிநெடுகிலும் அவர் விதைத்த அன்பின் கனிகளைக் குறித்த வெளிப்பாடுடன் அது நிறைவுற்றது.

நான்காவது ஞானி எனும் கதை சொல்லும் செய்தி தெளிவானது ! எந்த ஒரு அன்பின் செயலைச் செய்தாலும் நாம் இறைவனோடு நெருக்கமாகிறோம். அறியாத ஏழை ஒருவனுக்குச் செய்யும் உதவி, இறைவனையே சென்றடைகிறது. இறைவனுக்கான நமது மிகப்பெரிய காணிக்கை என்பது கனிவான அன்பின் செயல்களே !

ஆசீர்வாதம் பெற்று, நன்றி சொல்லி கடந்து போவதல்ல கிறிஸ்தவ வாழ்க்கை; பிறருக்கு ஆசீர்வதாமாய் இருந்து கிறிஸ்துவை காண்பித்துச் செல்வதே அவ்வாழ்க்கை!

அன்பில் பூவுலகம் மலர்ந்திட
அகிலத்தில் பாவம் மறைந்திட
மாந்தரின் மதியை வென்றிட
மண் மீது பிறந்திட்ட மகிபனை
மனதார வரவேற்போம்!
இடையருக்கு முதலில்
சொன்னதாலோ
நீர் ஏழையின் இறையானீரோ?
இழந்து போனதை தேட
இன்னல் பல எதிர்கொள்ள
ஈனரின் இழிநிலை மாற்ற
தாழ்மை கோலத்தில் பிறந்தவரே

நீர் மாற்றி கொஞ்சம் வரலாமே
தொடரும் தாழ்நிலை...
படரும் படிநிலை...
பரவும் அடக்கு நிலை...
கொண்டாடும் பிறப்பு நாள்
மாறும் நாள் எந்நாளோ?
அசலடிப்பட்டோரையும்
அல்லறுவோரையும்
அரியணை ஏற்றவே
மகவாய் மலர்ந்தவரே,
மனிதம் சரிநிகர்
பாருக்கு உணர்த்திடவே
மானிடனாய் பிறந்தீரோ?
இன்றும்...
ஓர் நட்சத்திரம்
எட்டிப் பார்த்து
புறப்படலாமா ?
புறமுதுகிட்டு
புறம் போகிறேன் ...

ஓவியப்பாவை
Mayiladuthurai

“ஏம்பா சுரேஷ்! கிறிஸ்மஸ் எல்லாம் எப்படியிருக்கு?” என்று கேட்டான் சுகுமார். “நமக்கென்னப்பா கிறிஸ்தவர்களுக்குத்தான் கிறிஸ்மஸ், ஆடல் பாடல்னு அமர்க்களமா இருப்பாங்க” இது சுரேஷின் பதில்.

“ஜான், கிறிஸ்மஸ் எல்லாம் எப்படியிருக்கு?” என்று கேட்டார் பீட்டர். “ஏழைகளுக்கு என்ன சார் கிறிஸ்மஸ்? ஆலயத்திற்கு போட்டு கொண்டு போகக்கூட கிழியாத

யாருக்கானது கிறிஸ்மஸ்

அ.சாமுவேல் அண்ணாதுரை, ஈரோடு

சட்டையில்லையே” இது ஏழைத்தொழிலாளி ஜானின் பதில்.

யாருக்கானது கிறிஸ்மஸ்?

லூக்கா 2:8-ன் படி மேய்ப்பர்கள் வயல்வெளியில் தங்கள் மந்தையை காத்து வந்தனர். சமுதாயத்தில்

ஒதுக்கப்பட்டவர்கள், மேய்ப்பர்கள், ஓரங்கட்டப் பட்டவர்கள் மேய்ப்பர்கள், தேவாலயத்தில் ஜெபாலயத்தில் மேய்ப்பர்களுக்கு அனுமதியில்லை. அவர்கள் தீண்டத்தகாதவர்கள். பக்தியுள்ள மதத் தலைவர்கள் அவர்களை தொடமாட்டார்கள்! எந்த நீதிமன்றத்திலும் அவர்களுடைய சாட்சி ஏற்றுக் கொள்ளப்படாது. ஏனென்றால் அவர்கள் உண்மை யற்றவர்கள், அறநெறியற்றவர்கள் என்று கருதப்பட்டனர். சமுதாயத்தில் அவர்கள் கேட்ட வார்த்தைகள் அனைத்துமே புறக்கணிப்பின் வார்த்தைகள் தான். அவர்கள் தங்கள் வாழ்நாளில் பெரிய அளவில் சந்தித்தது புறக்கணிப்பு மற்றும ஒதுக்கப்படுதல் தான். ஆண்டவருமே தங்களை ஒதுக்கிவிட்டாரென்று அவர்கள் எண்ணியிருக்கக்கூடும். லேவியர், ஆசாரியர்கள், தீர்க்கதரிசிகள் என யாரும் மேய்ப்பர்களோடு பேசியது கிடையாது. அப்படியும் இவர்கள் மேய்ப்பர்களோடு ஏதாவது பேசினாலும் அவை அன்பற்ற வார்த்தைகள் தான்.

ஒதுக்கப்பட்ட மேய்ப்பர்களுக்கான கிறிஸ்மஸ்!

கடவுள் மேய்ப்பர்களுக்கு சிறப்பாக கிறிஸ்மஸ் செய்தியனுப்பினார். லூக்கா 2: 9-11 வசனங்களில் கர்த்தருடைய தூதன் அவர்களிடத்தில் வந்து நின்றான். கர்த்தருடைய மகிமை அவர்களை சுற்றிலும் பிரகாசித்தது. கிறிஸ்மஸ் நற்செய்தி அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் அவர்களுக்கு தாவீதின் ஊரிலே பிறந்தார். குழந்தையை பற்றிய அடையாளம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. பரமசேனையின் திரள் முதல் கிறிஸ்மஸ் கீதத்தை அவர்களுக்கு பாடினார்கள்.

இவை அனைத்தும் யாருக்காக? சமூகத்தால்

தீட்டுப்பட்டவர்கள், தீண்டதகாதவர்கள், பாவிகள் என்று ஒதுக்கப்பட்ட மக்களுக்கு.

இந்த கிறிஸ்மஸ் செய்தியைக் கடவுள் வானத்திலிருந்து பெரிய எழுத்துக்களால் எழுதி தொங்கவிட்டிருப்பாரெனில் அது யாருக்கோ என்று மேய்ப்பர்கள் எண்ணியிருப்பார்கள். நாம் ஒதுக்கப்பட்டவர்கள், தகுதியற்றவர்கள் இந்தச் செய்தி நமக்கானது அல்ல என்று விட்டிருப்பார்கள். இதை ஆலயத்தில் அறிவித்திருந்தால் அவர்களுக்கு தெரிந்திருக்க வாய்ப்பேயில்லை. ஆனால், கடவுள் மேய்ப்பர்கள் மீது கரிசனை கொண்டு அவர்களை அதிகமாய் நேசித்து இந்த செய்தியினை தம்முடைய தூதன் அவர்களுக்காக அனுப்பினார்.

மனிதர்களால் ஒதுக்கப்பட்டவர்களை தேடிவந்த கர்த்தருடைய தூதன்

தேவாலயத்துக்குப் புறம்பாக்கப்பட்ட மேய்ப்பர்களைச் சுற்றி கர்த்தருடைய மகிமை, வெறுப்பின், புறக்கணிப்பின் வார்த்தைகளை மட்டுமே கேட்டு பழகியவர்களுக்கு நம்பிக்கையின் நிச்சயத்தை தரும் நற்செய்தி. கடவுளின் ஆசீர்வாதம் தங்களுக்கு இல்லை என்று எண்ணிய

மேய்ப்பர்களுக்கு உலகத்தை மீட்பவர் பிறந்திருக்கிறார் என்று நற்செய்தி வந்தது. வேத வசனங்களையும், ஆராதனை ஜெபங்களையும், பாடல்களையும், கேட்க வாய்ப்பே இல்லாத மேய்ப்பர்களுக்கு தேவ தூதரின் வார்த்தை துதிப்பாடலாய் இருந்தது. கிறிஸ்மஸ் இவர்களுக்குரியது.

இன்றைக்கும் பலர் தங்களை தாங்களே ஒதுக்கி கொள்ளுகிறார்கள். தங்கள் தகாத பழக்கவழக்க ங்களினால் கடவுளின் ஆசீர்வாதத்தை பெற தங்களுக்கு தகுதியில்லை என்ற எண்ணத்தோடு தாங்களே முடிவுக்கு வந்துவிடுகின்றனர். ஆண்டவர் யாரையும் ஒதுக்கிவை ப்பவர் அல்ல, புறக்கணிக்கிறவர் அல்ல மாறாக அவர் எல்லோரையும் அரவணைக்கிறவர். அவரது அளவில்லாத அன்பினால் நமக்குள் இருக்கும் தேவையற்ற அனைத்தும் தானாக வெளியேறிவிடும்.

இந்த உலகத்தில் தங்களைத தாங்களே ஒதுக்கி கொள்ளுகிறவர்கள், பிறரால் ஒதுக்கப்படுபவர்கள் மதம், சாதி, பொருளாதாரம், தூய்மை ஆகியவற்றின் காரணமாக புறக்கணிக்கப்பட்டு புண்பட்டவர்கள் உண்டு. நியாய ந்தீர்க்கும் பரிசேயர் சொற்கள் பக்தியின் பெயரால் பலரையும் ஒதுக்கி காயப்படுத்தியிருக்கின்றனர். ஆனால், கிறிஸ்து பிறப்பின் செய்தியினை கடவுள் தம்முடைய தூதன் வழியாக சொன்ன வார்த்தைகள் அனைத்தும் அனைவருக்குமான, அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வார்த்தைகள், அங்கீகரிக்கப்பட்ட வார்த்தைகள், புறக்கணிக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், வாழ் விழந்த நம்பிக்கையிழந்த மக்களுக்கான நலம் தரும் வார்த்தைகள். நம் நாட்டில் ஒன்றுமேயில்லாத கூட்டம் ஒன்றிருக்கிறது. அவர்கள் இயேசு என்ற பெயரை ஒருமுறைகூடக் கேட்காத கூட்டம், கேட்க வாய்ப்பே

இல்லாத கூட்டம், கிறிஸ்து பிறப்பின் செய்தியினை அறியாத கூட்டம்.

கடவுள் தனது தூதனை அனுப்பியிராவிட்டால் மேய்ப்பர்கள் இயேசு கிறிஸ்துவை, அவரது பிறப்பை அறிந்திருக்கமாட்டார்கள். அது போலத்தான் இந்தக் கூட்டமும். கிறிஸ்மஸ் இவர்களுக்குமுரியது.

நெகேமியா 8: 10-ல் கூறியபடி கொண்டாட்டத்தின் நாளில் “கொழுமையானதை புசித்து, மதுரமானதை குடித்து ஒன்றுமில்லாதவர்களுக்கு பங்குகளை அனுப்புங்கள் என்று மக்களுக்கு எஸ்றா கூறுகிறார். நமக்கும் இதுதான் கடவுளின் வாக்கு.

மேய்ப்பர்கள் தீவிரமாய் வந்தார்கள், கிறிஸ்துவை கண்டார்கள். தாங்கள் கண்டதையும், கேட்டதையும் மற்றவர்களுக்கும் கூறினார்கள் (லூக்கா 2: 16-17) கிறிஸ்து பிறப்பின் செய்தியினை ஒதுக்கப்பட்ட, ஒன்றுமில்லாத மக்களும் அறிய வேண்டும். அறிந்தால் அவர்களும் நம்புவார்கள். நம்பிக்கையின் நற்செய்தியினை எல்லோருக்கும் அறிவிப்பார்கள்.

கிறிஸ்துமஸ் இயேசுவை அறிந்திராத மக்களுக்கானது. ●

மீட்பதற்கு,
குமாரன் இருக்கும் தைரியத்தில்தான்
கடவுள் ஏதேன் தோட்டத்தில்
சோதனைக்கான கனியை
வைத்திருப்பார்

வலியின் பயணங்களில் பாடங்கள்

சேவியர்
சென்னை

கிறிஸ்மஸ் என்றதும் ஆனந்தம் நம்மை ஆட்கொள்கிறது. இது ஒரு மகிழ்ச்சியின் காலம் என நாம் நமக்குள் எழுதிக் கொள்கிறோம். உண்மை தான், கிறிஸ்மஸ் என்பது மகிழ்ச்சியின் காலம் தான். பாவத்தின் அழிவிலிருந்து நம்மை மீட்க, கால்நடைத் தொழுவிலிருந்து அழுகுரல் எழுந்த காலம். வானத்தில் ஒரு நட்சத்திரம் வழிகாட்ட, பூமியில் ஒரு ஆதவன் அவதரித்த காலம். முன்னணியில் இருக்க வேண்டியவர் முன்னணையில் வந்த காலம். அன்றைய தினத்தை ஆனந்தமாகவும், உற்சாகமாகவும் கொண்டாடவேண்டியது முறை தான். ஆனால், அந்த மகிழ்ச்சி எல்லோருக்கும் கிடைக்கிறதா என்பதை சிந்திக்க வேண்டும்.

கிறிஸ்மஸ், மகிழ்ச்சியின் மழலைக் குரலுடன் பல கண்ணீர்க் குரல்களும் கலந்த காலம் என்பதையே விவிலியம் பதிவு செய்கிறது. அந்த கண்ணீரின் குரல்களுக்கு, நம் ஆறுதல் விரல்கள் தயாராய் இருக்கிறதா?

மக்கள்தொகைக் கணக்கெடுப்பு எனும் அரசின் கட்டளை

மரியாவையும், யோசேப்பையும் பெத்லேகேமுக்கு இழுத்து வருகிறது. அரச கட்டளையை தாய்மை நிலையில் கூட நிராகரிக்காத குடும்பம் திருக்குடும்பம். சீசருக்குரியதை சீசருக்குக் கொடுங்கள் என இயேசு சொல்லும் முன்பே சீசருக்குரியதைச் சீசருக்குக் கொடுக்க, கடவுளோடு வந்த குடும்பம் மரியாவின் குடும்பம்.

அவர்கள் பெத்லேகேம் வந்தபோது அங்கே மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. வீடுகளெல்லாம் விருந்தினர்களால் நிரம்பின. அவர்கள் அங்கே தங்கியிருக்கையில் மரியாவுக்குப் பேறுகாலம் வருகிறது. விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்காததால், குழந்தையைத் தொழுவத்தில் கிடத்துகிறார்கள்.

மரியாவும், யோசேப்பும் உறவினரின் வீட்டில் தங்கியிருக்கிறார்கள். விடுதி என்பது வீடுகளில் உள்ள விருந்தினர் தங்கும் அறையைக் குறிக்கும். அந்த அறை வேறு விருந்தினர்களால் நிரம்பியிருந்தது. யூத வீடுகளில் கால்நடைகளுக்கான இடம் கீழ்த்தளத்தில் அமைந்திருக்கும், மேலே விடுதியில் இடமில்லாததால் அவர்கள் கீழே சென்று குழந்தையைக் கிடத்தினார்கள். என்பதே பெரும்பாலான இறையியலாளர்களின் தற்போதைய நம்பிக்கை.

இந்த நிகழ்வு நமக்கு ஒரு சிந்தனையைத் தருகிறது. பரபரப்பு நிறைந்த பெத்லேகேமால் படைத்தவருக்கு ஒரு நல்ல இடத்தைத் தர முடியாமல் போகிறது. அங்கே இருந்தவர்கள் யாரும் மோசமானவர்கள் அல்ல. கெட்டவர்கள் அல்ல. எல்லோரும் பரபரப்பானவர்கள். பிஸியானவர்கள். பல அலுவல்களில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள்.

நம்முடைய பிஸி வாழ்க்கை இயேசுவை வெளியே தள்ளி கதவைப் பூட்டுகிறதா? வசதியான இடங்களை நாம் அபகரித்துவிட்டு, இயேசுவுக்கு புறக்கணிப்பின் பகுதியைக் கொடுக்கிறோமா? பரபரப்பான வாழ்க்கை நம்மிடமிருந்து செபத்தை அகற்றுகிறது, குடும்ப செபத்தைக் குறைக்கிறது, பைபிள் வாசிப்பை நீக்குகிறது, கடவுளோடு செலவிடும் நேரத்தைக் குறைக்கிறது. இவையெல்லாம் நமக்கும் கடவுளுக்கும் இடையேயான நெருக்கத்தைக் குறைத்து அவரை வெளியே தள்ளுகின்றன.

பரபரப்பான வாழ்க்கை, கிறிஸ்தவ மதிப்பீடுகளை நம் வாழ்க்கையில் வெளிப்படுத்த வேண்டிய தருணங்களைக் குறைக்கிறது. அது திருச்சபைகளில் அதிகமாய் ஈடுபடுவதானாலும் சரி, நோயாளிகள், ஏழைகள் இவர்கள் மீதான கரிசனைப் பார்வையானாலும் சரி. முதியோர் இல்லங்கல், அனாதை இல்லங்கள் போன்ற சந்திப்புகள் ஆனாலும் சரி அல்லது நற்செய்தி அறிவித்தல் காரியங்களானாலும் சரி. அவற்றையெல்லாம் பிஸி வாழ்க்கை தடுக்கிறது. இதன் மூலம் நாம் இயேசுவை நம் வாழ்வின் வட்டத்திலிருந்து வெளியே தள்ளுகிறோம்.

பரபரப்பான வாழ்க்கைச் சூழல் நமக்கு அதீத சோர்வைக் கொடுக்கிறது. வேலை முடிந்தால் ஓய்வு, ஓய்வு

முடிந்தால் வேலை எனும் சிந்தனைக்குள் நம்மை அமுக்குகிறது. கடின உழைப்பு நமது கடமை எனும் எண்ணமே நமக்குள் மேலோங்குகிறது. வேலைப்பளு, மன அழுத்தம் எல்லாமே இறைவனோடான நமது உறவுக்கு வேகத்தடையாய் மாறிவிடுகிறது.

பரபரப்பான வாழ்க்கைச் சூழல் நமது உறவுகளை பலவீனமடையச் செய்கிறது. அவர்களோடு பேசவும், அவர்களோடு நேரத்தைச் செலவிடவும் நமக்கு நேரமில்லாமல் போகிறது. கார்ப்பரேட்கள் தங்கள் லாபத்துக்காக எழுபது மணி நேரம், எண்பது மணி நேரம் உழைக்க வேண்டுமென கட்டாயப்படுத்தும். அந்த கட்டாயம்கடவுளைநம்வாழ்விலிருந்துஅந்நியப்படுத்தும்.

பரபரப்பான வாழ்க்கைச் சூழல் கடவுளின் மெல்லிய சத்தத்தைக் கேட்கவிடாமல் நம்மைத் தடுக்கும். நமது சிந்தனைகளை இறையின் பாதையிலிருந்து மாற்றி அலுவல் படிகளில் அமர வைக்கும். மேலோட்டமான விசுவாச வாழ்க்கை நம்மை நதி மீதான இலை போல அலைக்கழிக்கும்.

இப்படி அன்றைய பெத்லேகேமின் பரபரப்பு, இயேசுவுக்கு இடம் கொடுக்காததைப் போல, இன்றைய பரபரப்பான நமது வாழ்க்கை இயேசுவுக்கான இடத்தைக் கொடுக்காமல் வெளியேற்றலாம். எனவே கவனமாய் இருப்போம். நமது வாழ்வுக்காக உழைக்க வேண்டுமே தவிர, உழைப்புக்காகவே வாழக் கூடாது. போதுமென்ற மனதோடு வாழ்வதே, பரமன் போதுமென்ற மனதோடு வாழ்பவர்களின் சிந்தனையாய் இருக்க வேண்டும்.

பெத்லேகேமின் பரபரப்புகளைக் கடந்தால் மரியாவுக்கு இன்னொரு சிக்கல் வருகிறது. ஏரோது குழந்தையைக்

கொல்லத் தேடுகிறான். அப்படியானால் உடனடியாக, இரவோடு இரவாக அவர்கள் ஊரை விட்டு வேறு ஊர் சென்றாக வேண்டும். அதுவும் ஏரோதின் கண்களுக்குத் தப்ப வேண்டுமெனில் எகிப்துக்குச் செல்ல வேண்டுமென முடிவெடுக்கிறார்கள். பயணப்படுகிறார்கள்.

நாம் ஒரு வரியில் இந்த செய்தியைக் கடந்து செல்கிறோம். ஆனால் மரியாவும், யோசேப்பும், குழந்தை இயேசுவும் எகிப்தில் எவ்வளவு கஷ்டங்களை அனுபவித்திருப்பார்கள் என்பதை சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

அவர்களுக்கு மொழி தெரியாது. இவர்களுக்குத் தெரிந்தது அராமிக் மொழி அல்லது எபிரேய மொழி. ஆனால் எகிப்திலோ கிரேக்கம், கோப்டிக் மற்றும் எகிப்திய மொழி போன்றவையே பழக்கத்தில் இருந்தன. மொழி தெரியாத ஊரில் அவர்களுடைய ஆரம்ப கால வாழ்க்கை மிகவும் கடினமாகவே கடந்திருக்கும் !



எகிப்து மிகப்பெரிய கலாச்சார வேறுபாடுடைய நகரம். அவர்களுடைய வாழ்க்கை முறை, வழிபாட்டு முறை, கலாச்சார பண்பாட்டு நிகழ்வுகள் எல்லாமே இவர்களுக்குப் புதியது. அவையெல்லாம் திருக்குடும்பத்தைத் தனிமைப்படுத்தியிருக்கலாம். மன

உளைச்சலுக்கும்,குழப்பத்துக்கும் உள்ளாக்கியிருக்கலாம்.

அவர்களுக்கு அங்கே தங்குமிடம் கண்டுபிடிக்க சிரமம் இருந்திருக்கலாம். நாம் ஒரு ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குச் செல்ல வேண்டுமெனில் வாகனத்துக்கு டிக்கெட் புக் பண்ணி, அங்கே தங்குவது எங்கே என்பதை ஒரு முறைக்கு நான்கு முறை உறுதிப்படுத்தி, அங்கே வசதிகள் இருக்கின்றனவா என்பதை ஊர்ஜிதப்படுத்தி விட்டு தான் பயணம் செல்வோம். ஆனால் இயேசுவின் குடும்பமோ அவை எதையும் செய்யவில்லை. அவசரமாய் ஓடுகிறார்கள். எனவே வசதியில்லாத குடும்பத்தினர் அங்கே தங்குமிடத்துக்காய் கஷ்டப்பட்டிருக்கலாம்.

ஒரு வேலையைக் கண்டடைய அவர்கள் கஷ்டப்பட்டிருக்கலாம். யோசேப்பு திறமையான தச்சுத் தொழிலாளி. அங்கே அவர்களுக்கு தச்சுத் தொழில் செய்ய வாய்ப்புக் கிடைத்ததா அல்லது அங்குள்ள சூழலுக்கேற்ப ஏதேனும் வேலை கிடைத்ததா என தெரியாது. ஆனால் புதிய இடத்தில் புதிய வேலையைக் கண்டுபிடிக்க, வாழ்க்கையை நகர்த்த அவர்கள் சிரமப்பட்டிருக்கலாம்.

பாதுகாப்பு அவர்களுக்கு ஒரு சவாலாய் இருந்திருக்கலாம். எகிப்தைப் பற்றி அறியாதவர்கள் இவர்கள். பிற மக்களின் வருகையைவிரும்பாதவர்கள்எகிப்தில்இருந்திருக்கலாம். அல்லது இவர்களிடமிருந்து எதையேனும் அபகரிக்க வேண்டுமென நினைத்தவர்கள் இருந்திருக்கலாம். இத்தகைய சவால்களை திருக்குடும்பம் கடந்து சென்றிருக்க வேண்டும்.

அடிப்படைவசதிகளுக்காகஅவர்கள்அலைந்திருக்கலாம். நல்ல உணவு, தண்ணீர் போன்றவை கிடைக்காமலோ, அல்லது அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான வழிகள்

தெரியாமலோ அவர்கள் சவால்களைச் சந்தித்திருக்கலாம். தெரிந்த முகங்கள் இல்லாமல், உதவி செய்யும் உறவினர்கள் இல்லாமல் அவர்கள் கடினமான நாட்களுக்குள் நடந்திருக்க வேண்டும்.

அவர்களுக்கு அரசியல் ரீதியிலான சவால்கள் இருந்திருக்கலாம். அன்னிய நாட்டில் என்னென்ன சட்டங்கள், எதைக் கடைபிடிக்க வேண்டும், என்ன வரிகளைச் செலுத்த வேண்டும், எதற்கெல்லாம் அனுமதி உண்டு, எதெல்லாம் தடை செய்யப்பட்டவை என்பதைக் கண்டுபிடிக்கவே அவர்கள் கஷ்டப்பட்டிருக்கலாம். அவர்களுக்கு உடல் நலப் பிரச்சினைகள் வந்திருக்கலாம். குழந்தைக்கும், தாய்க்கும் மருத்துவ உதவிகள் தேவைப்பட்டிருக்கலாம்.

இவற்றோடு சேர்ந்து, ஏரோது மன்னன் இங்கே வந்து தங்களைக் கைது செய்து விடுவானோ எனும் அச்சமும் அவர்களிடம் இருந்திருக்கலாம்.

ஒரு இடத்தை விட்டு, இன்னொரு இடத்துக்குச் செல்பவர்களின் சவால்கள் சொல்லி முடியாதது. மேலே சொன்னவை நமது சிந்தனையில் எழுகின்ற சில விஷயங்கள் மட்டுமே. புலம் பெயர்ந்து செல்பவர்கள் மட்டுமே அதன் உண்மையான கஷ்டத்தையும், சவால்களையும் கண்டுணர முடியும்.

ஆனால், இவையெல்லாம் மீறி குழந்தையை நலமுடன் பாதுகாத்து. ஏரோது இறந்தபின் தாயகம் திரும்பியிருக்கிறார்கள் என்றால் அவர்களுக்கு எகிப்து மக்கள் உதவியிருக்கிறார்கள் என்றே நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நம்மிடையே புலம் பெயந்து வந்து ஏராளம் பேர்வாழ்கிறார்கள். பிறமாநிலங்களிலிருந்து நம்மிடையே வாழ்கின்ற மக்கள் அன்று மரியாவும், யோசேப்பும் சந்தித்த அதே பிரச்சினைகளைச் சந்திக்கிறார்கள். அன்று எகிப்து மக்கள் இயேசுவின் குடும்பத்துக்கு உதவியது போல, இன்றுநாம்இயேசுவின்பிம்பங்களாகியசகமனிதர்களுக்கு உதவ வேண்டும்.

அவர்களுக்கு நமது கலாச்சாரம் புரியாது, அவர்களுக்கு நமது மொழி புரியாது, அவர்களுக்கு வேலைகள் கிடைக்காது, அவர்களுக்கு பாதுகாப்பு சவால்கள் இருக்கும், அடிப்படை வசதிகளுக்காகக் கஷ்டப்படுவார்கள், அவர்களுக்கு சமூக நெருக்கடிகள் இருக்கும், அவர்களுக்கு நிராகரிப்புகள் இருக்கும்.. இவற்றையெல்லாம் சகித்து அவர்கள் இங்கே வருவதன் காரணம் வாழவேண்டும் எனும் உந்துதல் தான். வாழ்க்கையின் நிர்ப்பந்தம் தான். அவர்களை நேசிக்கப் பழகுவோம்.

புலம் பெயர்ந்த மக்களை நேசிப்பது, இறைவனையே நேசிப்பதைப் போல ! ஏனெனில் இவர்களும் இயேசுவின் பிம்பங்களே!! இயேசுவும் புலம் பெயர்ந்தவராய் வாழ்ந்தவரே !

கிறிஸ்மஸ் ஒரு குழந்தையின் பிறப்பை மட்டுமல்ல, பல குழந்தைகளின் இறப்பையும் நமக்கு நினைவூட்டுகிறது. இரண்டு வயதுக்குட்பட்ட ஆண் குழந்தைகளையெல்லாம் கொல்ல வேண்டுமென கட்டளையிடுகிறான் ஏரோது மன்னன். பெத்லேகேம் வீதிகளில் மரணம் நடக்கிறது. கொல்லப்பட வேண்டிய இயேசு எகிப்துக்கு கொண்டு செல்லப்பட, பாவமறியா பாலகர்கள் பலர் படுகொலை செய்யப்படுகின்றனர்.

கிறிஸ்மஸ் ஒரு தாயின் பரவசத்தையும், பல தாய்மார்களின் பரிதவிப்பையும் இணைத்தே நம்மிடம் பேசுகிறது. ஒரு தாயின் மகிழ்வில் பங்குபெறும் நாம், பல தாய்மார்களின் துயரத்திலும் பங்கு பெற வேண்டும்.

கிறிஸ்மஸ் என்பது ஆழமான காயங்களின் மீது கட்டமைக்கப்படுகிறது. அந்தத் தாய்மார்களின் அழுகையில் ஆறுதலாய் நாம் இருக்க வேண்டும். அரச கட்டளை உருவாக்கிய பயத்தின் வீதிகளில், நம்பிக்கையின் ஒளிக்கீற்றை நாம் அனுப்ப வேண்டும்.

பாலகர்களின் படுகொலை அவர்களுடைய பாவத்தினால் வந்ததல்ல. அவர்கள் செய்த தவறுகளினால் விளைந்த தல்ல. அவர்களுக்கு சற்றும் சம்பந்தமில்லாத நிகழ்வினால் வந்தது. இன்றும் எத்தனையோ அப்பாவிகள் அரசனின் கட்டளையினால் அகப்பட்டு வாழ்விழக்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கையின் ஆறுதலுக்காகவும், மாறுதலுக்காகவும் நமது கரங்கள் நீள வேண்டும்.

இயேசுவுக்காய் இரத்தம் சிந்திய அந்த முதல் இரத்த சாட்சிகளின் குடும்பங்களுக்காக இரக்கப்பட வேண்டும், அவர்களுடைய தேவைகளில் நாம் தென்பட வேண்டும். எந்த ஒரு மகிழ்வின் பின்னாலும் ஒரு துயரம் இருக்கலாம் எனும் உண்மையை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும்.

நிராகரிக்கப்பட்டவர்கள், புறக்கணிக்கப்பட்டவர்கள், இயலாமையை சுமந்தவர்கள் இவர்களின் சார்பாக நிற்க கிறிஸ்தவர்கள் நாம் அழைக்கப்படுகிறோம். அவர்களுடைய தளர்ந்து போன நம்பிக்கைகளுக்கு தூண் கொடுக்க அழைக்கப்படுகிறோம்.

கிறிஸ்மஸ் கொண்டாட்டத்தின் காலம் தான். அது எல்லோருக்குமானகொண்டாட்டமாய்இருக்கவேண்டும். கிறிஸ்மஸ் மகிழ்ச்சியின் காலம் தான், அது எல்லோருக்குமான மகிழ்ச்சியாய் மாற வேண்டும். கிறிஸ்மஸ் மீட்பின் தருணம் தான், அது எல்லோருக்குமான மீட்பாய் மலரவேண்டும். அதற்காக நாம் இதயத்தைத் திறந்து இறைவனை வேண்டுவது மட்டுமல்ல, கரங்களைத் திறந்து எளியவர்களையும் தீண்டவேண்டும்.

ராமாவில் இனிமேல் சிரிப்பின் பேரொலி எழட்டும். புலம் பெயர்ந்தோர் இனிமேல் மனம் குளிர்ந்தோர் ஆகட்டும். பிஸியான வாழ்க்கை நம்மிடமிருந்து இயேசுவைப் பிரிக்காமல் இருக்கட்டும். அப்போது கிறிஸ்மஸ் அர்த்தப்படும்! அனைவருக்கும் கிறிஸ்து பிறப்பு நல்வாழ்த்து !

வார்த்தை மாம்சமானது



Dr.Laji G Chacko
Tamilnadu Theological Seminary,
Arasaradi,

கிறிஸ்மஸ் என்றாலே நம் சிந்தையில் வருவது அலங்கார விளக்குகள், நட்சத்திரங்கள், கிறிஸ்மஸ் தாத்தா,

சபைகளின் கேரல், கிறிஸ்மஸ் கேக், கிறிஸ்துமஸ் மரம் போன்றவைகளே. மேலும் அன்று சிறப்பு உணவுகள், புத்தாடை, பரிசுகள் பரிமாறுதல், ஆலய ஆராதனையில் கலந்து கொள்ளுதல், நாடகங்களில், பாடல்களில் பங்கு பெறுதல் என கிறிஸ்மஸ் பண்டிகைத் தொடர்கிறது. ஆனால் இவைகளெல்லாம் ஒரு 'மத திருவிழா' போல 'கலாச்சார திருவிழா' போல, அல்லது 'தேசிய திருவிழா' போல நடக்கிறதேயன்றி உண்மையான கிறிஸ்மஸ் நோக்கம் அறியாமலே இவைகள் செயல்படுகிறது. கிறிஸ்மஸ் நாளில் நாம் சிந்திக்க வேண்டிய மையச்செய்தி ஒன்று உள்ளது. அதைப் புரிவதே உண்மையான கிறிஸ்மஸ் உடைய அடையாளமாகும்.

யோவான் நற்செய்தியில் கிறிஸ்து பிறப்பு

கிறிஸ்மஸ் ஆனது ஒரு மிக முக்கிய அம்சத்தை வெளிப்படுத்துகிறது. அது கிறிஸ்து மனுஅவதாரம் (Incarnation) அடைந்ததே. கிறிஸ்து திரித்துவத்தில் இரண்டாவதாக பார்க்கப்படுகிறார். இவர் 'வார்த்தையானவர்' அல்லது 'கடவுளின் குமாரன்' (Son of God) என அழைக்கப்படுகிறார். அவர் கன்னி மரியாளின் வயிற்றில் கருத்தரித்த பின்பு 'மனுஷனானார்' அதாவது 'மாம்சமானார்'. அவதாரத்தைக் குறிக்கும் Incarnation என்ற ஆங்கில வார்த்தை லத்தீனிலிருந்து தோன்றியதாகும். in = in (or) into (-இல் அல்லது உள்ளே) Caro (or) Carnis = flesh சதை. இதன் பொருள் மனிதனாக (enflesment) மாறுதல் என்பதாகும்.

கிறிஸ்தவத்தில் இரண்டு கோட்பாடுகள் மிகவும் முக்கியமானவை அது 'கடவுள் உலகை படைத்தார்' என்பதும், இரண்டாவது 'கடவுள் உலகை மீட்க தன் குமாரனாகிய இயேசுவை அனுப்பினார்' என்பதுமாகும். கிறிஸ்மஸ் உடைய செய்தியும் அதுதான். கிறிஸ்து

குழந்தையாகப் பிறந்ததை ‘மத்தேயு’ மற்றும் ‘லூக்கா’ அழகாகச் சொல்லியிருந்தாலும், அது கிறிஸ்துவின் ‘மானுட அவதாரத்தை’ மட்டுப்படுத்துகிறது. ஆனால் யோவான் நற்செய்தியாளன் இதைச் சொல்லும் போது வசனம் 1:14 -ல் ‘வார்த்தை மாம்சம் ஆனார்’ என்பதை அறிவிக்கிறது. எனவே கிறிஸ்மஸ் உடைய ஆழம் அறிய யோவான் நற்செய்தியை நாடுவதே சிறப்பானது.

இதைப் புரிந்து கொள்ள யோவான் நற்செய்தியை துவக்கத்திலிருந்தே அணுக வேண்டும். அங்கே கிறிஸ்து மானிடமாகும் முன்பு எப்படி இருந்தார் என்பது விளக்கப்படுகிறது. யோவான் நற்செய்தியாளன் ‘தொட்டிலில் குழந்தை கிடந்ததைப்’ பற்றி பேசவில்லை மாறாக ‘குழந்தைக்கு முன் அவர் எப்படி இருந்தார்’ பேசுகிறார். அதாவது அவர் ‘கடவுளாக இருந்ததைப்’ பற்றி பேசுகிறது. அவர் ‘படைப்பிற்கு முன்பே இருந்ததைப்’ பேசுகிறது. அவர் படைப்பில் ஈடுபட்டவர் (படைத்தவர்) என்பதைப் பேசுகிறது. அவர் பெத்லேகமில் பிறந்து தீவனத் தொட்டியில் இருக்கும் முன்பே கடவுளின் திட்டத்தில் கூட இருந்தார் என்பதைப் பேசுகிறது.

கிறிஸ்து மனிதனாய் பிறக்கும் முன்பு யார்

யோவான் 1:1-5

1. ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. 2. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். 3. சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று; உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை. 4. அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. 5. அந்த ஒளி இருளிலே பிரகாசிக்கிறது; இருளானது அதைப் பற்றிக் கொள்ளவில்லை.

யோவான் தனது எழுத்துக்களை கவனமாய் தொடங்குகிறார். ‘ஆதியிலே வார்த்தை இருந்தது....’ என்று. யோவான் 1:1-5 வரை சற்று வித்தியாசமாக இருக்கிறது.

ஆயினும் ஒரு புரிதல் ஏற்படுகிறது. இது நம்மை ஆதியாகமம் முதல் அதிகாரத்தில் உள்ள வசனங்களுக்கு நேராக நம்மை நடத்துகிறது, “ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்” (ஆதி 1:1). ஆதியாகம படைப்பின் நிகழ்வின் க்ளைமாக்ஸ் (முடிவு) என்பது ‘கடவுளின் சாயலில் உருவாக்கப்பட்ட மனிதனாகும்’ (ஆதி 1:26).

யோவான் எழுதிய படைப்புச் செய்தியானது ‘சிருஷ்டிப்பின் கடவுள் புதிய வழியில் தனக்கு பிரியாமான தான்படைத்த சிருஷ்டிப்புக்குள் இணைவதைப்பற்றியது’. படைப்பின் தொடர்ச்சியாக, படைப்பாளர் நினைத் திருந்த/விரும்பிய உச்சகட்ட நிலையை அடைவதைப் பற்றியது. வார்த்தையின் மூலம் இது சாத்தியமாகிறது. யோவான் 1-ல் களைமாக்ஸ் என்பது ‘வார்த்தை மாமிசமாகி மனிதனாக வந்ததாகும்’. யோவான் தனது கிறிஸ்து பிறப்பு நற்செய்தியை ஏதோ ஒரு இடத்தில் குறிப்பிட்ட நேரத்தில் நடந்த ஒரு கதாபாத்திரத்தின் நிகழ்வாக அல்லாமல்

இதை கடவுளின் கதையாகவும் உலகத்தின் கதையாகவும் காண்கிறார்.

ஆதியாகமம் புத்தகம் உலக படைப்பைப் பற்றி பேசுகையில் நான்காவது நற்செய்தி நூல் படைக்கப்படாத 'வார்த்தையைப்' பற்றி பேசுகிறது (கடவுளுடன் இருந்தவர், படைப்புக்கு முன்பு கடவுளாக இருந்தவர்). சிருஷ்டிப்பு நடைபெறுவதற்கு முன்னமே அவ்வார்த்தை இருந்தது. 'வார்த்தை'யை புதிதாய் படைக்கப்பட்ட ஒன்றாக குறிப்பிடாமல் நித்தியத்தில் அந்த வார்த்தை இருந்ததையும் கடவுளுடன் அதன் உறவையும் விவரிக்கிறார்.

கிறிஸ்துவை பெத்லகேமில் பிறந்த ஒரு வரலாற்று நபராக மட்டும் குறிப்பிடாமல். "படைத்த உலகத்தை மீட்டெடுக்க படைப்புக்குள் நுழைந்த நித்திய கடவுளாக குறிப்பிடுகிறார்". பெத்லகேமில் பிறந்த குழந்தை சாதாரண குழந்தை அல்ல. அது நித்திய வார்த்தை மாம்சமானதாகும் (யோவான் 1:14). கிறிஸ்மஸ் ஆழமான ஒரு உண்மையை வெளிப்படுத்துகிறது. "காலத்திற்கு அப்பாற்பட்ட ஒருவர் மனித குலத்திற்கு இரட்சிப்பைக் கொண்டு வருவதற்காக காலத்திற்குள் நுழைந்தார்".

பழைய ஏற்பாட்டில் வார்த்தை (logos) என்பதற்கு தொடர்புடைய எபிரேயச் சொல் தபார் (dabar) என்பதாகும். இது வார்த்தையை மட்டும் அல்ல ஒரு நிகழ்வையும் குறிக்கிறது. கர்த்தருடைய வார்த்தை வெறுமனே பேசப்படும் ஒரு சொல் அல்ல, அது படைப்பாற்றல் மற்றும் சக்திமிகுந்த செயலாகும். கடவுளுடைய செயல் என்பது அவர் பேசுவதாகும். ஒளி உண்டாகட்டும் என்றார் ஒளி உண்டானது, இது படைப்புக்கான சக்தியைக் கொண்டச் சொல். ஆக 'தபார்' (வார்த்தை) என்பது கடவுளின் சக்தி,

அது உயிர் கொடுக்கும் சக்தியை கொண்டுள்ளது (உபா.32.46-47). குணப்படுத்தும் சக்தி, அக்கறை மற்றும் கருணையுள்ளது (சங். 107.20). தீர்க்கதரிசன புத்தகங்களில் இது வழிகாட்டும் ஆற்றலுள்ளதாய் உள்ளது. கிரேக்க வார்த்தையான லோகோஸ் (Logos) - ஐ பயன்படுத்தும் போது இயேசு மனிதகுலத்திற்காக கடவுளின் தோற்றத்தை வெளிப்படுத்துபவர் மட்டுமல்ல, மாறாக வார்த்தை என்பது கடவுளின் செயல், கடவுளின் செயல்முறை. Logos என்பது தத்துவரீதியான ஒரு சிந்தை அல்ல, மனு அவதாரத்தின் மூலம் வரலாற்றில் நுழைந்த நித்திய நபர். கிறிஸ்மல செய்தி என்பது "நித்தியமானது நம் மத்தியல் வாழ வார்த்தையாகி மாம்சமானதே". இது சிருஷ்டிகருக்கும் சிருஷ்டிப்புக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறிக்கிறது.

கிறிஸ்மஸ் மனிதனாவதற்கு அழைப்பு விடுக்கிறது

கடவுள் மனிதனானார் என்பதே கிறிஸ்மஸ் செய்தி. அநேக நேரங்களில் மதத்தின் நோக்கம் மனிதனை ஆன்மீகவாதியாகவோ அல்லது உலகுக்கு அப்பாற்பட்ட ஒரு அதீத மனிதனாக மாற்றவோ முயற்சிக்கிறது. மானுட அவதாரமானது மனித வரம்பை முழுமையாக தனக்குள் கொண்ட நிகழ்வாகும். இது இன்று அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியினால் பேசப்படும் அழியாமை மற்றும் பூரண நிலை (உயர்ந்த நிலை) க்கு இது சவால் விடுகிறது. அறிவியல் மற்றும் தொழில்நுட்பங்களின் பல சோதனைகளின் குறிக்கோள் குறைபாடற்ற நோயற்ற வலுவான நிரந்தரமான மனித குலத்தை உருவாக்கும் முயற்சியாகும். இது பெரும்பாலும் மனித பிளவுகளை 'புதிய வளங்களை வாங்க முடிகின்றவர்களுக்கும் வாங்க முடியாதவர்களுக்கும்' இடையில் உருவாக்குகிறது. எல்லா மனிதர்களும் வலுவாக இளமையாக சக்திவாய்ந் தவர்களாக இருக்க முடியும் என்பதல்ல. ஆனால் அதற்கு

பணம் செலுத்தி அறிவியலை வாங்கக் கூடியவர் வலுவாக இருக்க முடியும். இது ‘உள்ளவர்கள்’ ‘இல்லாதவர்கள்’ என்ற உலகத்தை உருவாக்குகிறது. துரதிஷ்டமாக ‘சுரண்டல்’ மற்றும் ‘சமத்துவமின்மையை ஆதரிக்கும் மத அமைப்புகள் இந்த வேறுபாட்டை ஆதரிக்கிறது.



இந்த சீரழிக்கப்பட்ட உலகத்தில்தான் கிறிஸ்மல்-ன் செய்தி வருகிறது. இது கிறிஸ்து பிறப்பு செய்தியை மறுவாசிப்புக்கு நம்மைத் தூண்டுகிறது. அனைத்து ஆற்றலும் கொண்ட சர்வவல்லமையுள்ள வார்த்தையானவர் மனப்பூர்வமாக மனித வரம்புகளை / எல்லைகளை ஏற்றுக் கொண்டார். நோய், பசி, வலி, கண்ணீர், மரணம் போன்ற யதார்த்தங்களை கிறிஸ்து தழுவினார். மானுட அவதாரமானது பாதிப்பு மற்றும் வரம்புகளை பெருந்தன்மையோடு ஏற்றுக்க்கொள்கிறது. தொட்டிலில் குழந்தையாக பிறந்த இயேசு மனிதனாக இருப்பது என்பது இப்படிப்பட்ட அனுபவங்களில் பங்கேற்பதுதான் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறார். “மனிதனாக

இருப்பது நமது சொந்த பாதிப்புகளை ஏற்றுக்கொள்வதும் வரம்புகளின் மத்தியில் முன்னேறிச் செல்ல பலத்தைக் கண்டுபிடிப்பதாகும்." ஒரு நோய் இருந்தால் தான் குணப்படுவதை அனுபவிக்க முடியும். வலி மற்றும் உடைந்த நிலையை அடைந்தால் மாத்திரமே நாம் மகிழ்ச்சியை அனுபவிக்க முடியும்.

துரதிருஷ்டவசமாக தற்கால கிறிஸ்தவத்தின் செய்தியானது செழிப்பு, வெற்றி மற்றும் ஆசீர்வாதங்களில் கவனம் செலுத்துகிறது. கிறிஸ்மஸ் செய்திகளுக்கும் இப்படிப்பட்ட செய்திகளுக்கும் துளியளவும் சம்பந்தமில்லை. மனித அவதாரத்தின் மூலம் இயேசு மனிதவரம்புகள் மற்றும் போராட்டங்களுடன் தன்னையும் அடையாளப்படுத்தினார். கிறிஸ்மஸின் உண்மையான செய்தி என்பது துன்பங்களிலிருந்து தப்பிப்பத்து விடுவது அல்ல, மாறாக இம்மானுவேல் நம்முடன் இருக்கிறார், அவருடைய இரக்கமும் அன்பும் போராட்டங்களை எதிர்கொள்ள உதவும் என்பதாகும்.

ஆ.ஆ தாமஸ் அவர்கள் மனிதமே திருச்சபையின் பணியாக அங்கீகரித்தார். திருச்சபையின் நோக்கம் தன்னுடைய நிலையை உறுதியாக்கி முதலிடத்தில் இருப்பது அல்ல. மாறாக ஒதுக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களின் முன்னேற்றத்திற்காக பணி செய்வதாகும். கிறிஸ்மஸ் வெளிச்சத்தில் மற்றவர்களின் தேவைகளை உணர்ந்து அவர்களுடன் இணைந்து நின்று அவர்களின் நல்வாழ்வுக்காக பாடுபட வேண்டும்.

ஜீவன்: ஒரு பார்வை

யோவான் 1:4 "அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது". யோவான் நற்செய்தியில்

ஜீவன் என்னும் வார்த்தை மைய கருத்தாக உள்ளது. அதில் ஜீவன் (zeo) என்ற வார்த்தை 37 முறையும். நித்திய (alonios) என்றவார்த்தை17முறையும்பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஜீவன் என்பது கடவுளின் ஆகச்சிறந்த திட்டமாகும் / வரைபடமாகும். இந்த ஜீவனை உருவாக்கும் திட்டம் கடவுளின் படைக்கும் திறனால், உருவாகி அதற்குள் வளர்சியடையக்கூடிய, மாறுதலையடக்கூடிய, பூரண மடையக் கூடிய சாத்தியக்கூறுகளை கொண்டுள்ளது, இது தெய்வீக நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதாகும். ஒரு தாயின் வயிற்றில் கரு உருவாகி வளர்ச்சியடைந்து தோற்றம் பெற்று முதிர்ச்சியடைந்து பூரணமாகி குழந்தையாய் பிறப்பது போலவாகும். இந்த ஜீவன் கடவுளின் சாயலையும் தன்மையையும் பெற்றுள்ளது. இந்த ஜீவன் உயிரினங்கள் அனைத்திலும் இடம் பெற்றுள்ளன. இது கட்டடமொன்றின் வரைபடம் அதை உருவாக்குவதற்கான அனைத்து அம்சங்களையும் கொண்டிருப்பதைப் போல் தான். இந்த ஜீவன் தெய்வத்துடன் இணைக்கப் பெற்றுள்ளது. இந்த ஜீவனுக்குரியவடிவமானதுமுழுமையையும்நிறைவையும் நோக்கி வழிநடத்தும். கடவுளின் பண்பிலே ஜீவன் வேர் கொண்டுள்ளதால் அது படைப்பாக்கம், பகுத்தறிவு, நோக்கம் போன்ற கடவுளுடைய தன்மையை வெளிப்படுத்தும். இந்த ஜீவன் கடவுளுடைய வாழ்வின் வெளிப்பாடு. இந்த ஜீவன் கடவுளின் மொழி. இந்த ஜீவன் லோகோஸில் (வார்த்தை -Logos) முதிர்ச்சியடைந்து கடவுளாக இருந்த வார்த்தை மனிதனாக மாறியது. இவ்வாறு இயேசு கடவுளின் ஜீவனை தன்னில் சுமந்து பூமி வந்தார். இந்த ஜீவன் மனித குலத்திற்கு வழங்கப்பட்டது. ஜீவன் என்பது மனிதர்களின் மிகப்பெரிய பொக்கிஷம். அனைத்து உயிரினங்களின் மிகப்பரிய சொத்து. இது கடவுளின் மிகப்பெரிய பரிசு. நட்புறவின் மிகப் பெரிய அடையாளம். அன்பின் மிகப்பெரிய செயல் ஜீவனைப்

பகிர்ந்து கொள்வதில்தான்; உள்ளது. இயேசு உலகத்திற்கு வந்ததின் நோக்கம் அவரின் ஜீவனை கொடுப்பதாகும் (யோவான் 10:11-12). நற்செய்தியாளர்கள் நற்செய்தியை எழுதுவதன் நோக்கம் உலகிற்கு உயிர் கொடுப்பதாகும் (யோவான் 20:30-31). எனவே நான்காவது நற்செய்தி நூல் சில நேரங்களில் ஜீவனின் நற் செய்தி என்றழைக்கப்படுகிறது.

ஒளி : ஓர் பார்வை

வெளிச்சம் நன்மையின் அடையாள மாகவும் இருள் தீமையின் அடையாளமாகவும் இருக்கிறது (யோபு.30:26). யோவான் நற்செய்தி நூலில் ஒளி என்ற சொல் 23 முறை வருகிறது. 1 யோவான் 1:5-ல் கடவுள் ஒளியாக விவரிக்கப்படுகிறார். ஜோகனைனான் இலக்கியத்தில் (யோவான் எழுதிய புத்தகங்கள்) கடவுளைப் பற்றிய மூன்று விளக்கங்கள் உள்ளன. கடவுள் ஒளியாயிருக்கிறார் (1 யோவான் 1:5) கடவுள் அன்பாயிருக்கிறார் (1 யோவான் 4:8). தேவன் ஆவியாயிருக்கிறார் (யோவான் 4:24). கிறிஸ்து வழங்கும் ஜீவன் 'ஒளி' என்று விவரிக்கப்படுகிறது. இருளை அகற்றி 'புரிதல்' 'நோக்கம்' மற்றும் 'நம்பிக்கையை' கொண்டு வரும் ஒளியாகும். இந்த ஒளி சமூக, கலாச்சார மற்றும் மத எல்லைகளை கடந்து அனைத்து மனித குலத்திற்குமானது. இருண்ட இடங்களில் விளக்குகள் பிரகாசிப்பதைப் போல, கிறிஸ்துவின் பிறப்பு மனித இருளை அகற்றி தெய்வீக ஒளியை தருகிறது. "இருளில் நடக்கிற ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் தேசத்தில் குடியிருக்கிறவர்களின்மேல் வெளிச்சம் பிரகாசித்தது. (ஏசாய 9:2)" என்ற ஏசாயாவின் தீர்க்கத்தரிசனத்தை நிறைவேற்றுகிறது.

பிறருக்கு உயிர் கொடுப்பது (மனிதமாண்பு) கிறிஸ்துவின்

வாழ்வில் காணப்படுகிறது. கானாவூர் திருமணத்தில் கடவுளின் மகிமை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகிறது என்பதை கிறிஸ்து காட்டுகிறார் (யோவான் 2), முதல் அற்புதத்தின் மூலம் திருமணத்தை நடத்தின குடும்பத்தின் அவமானத்தை மாற்றி கடவுளின் மகிமையை வெளிப்படுத்தினார். அதே தன்மை சமாரிய பெண்ணுடனான அவரது உரையாடலும் (யோவான் 5), 38 வருடம் வியாதியான மனிதனை குணப்படுத்துவதிலும் (யோவான் 5), 5000 நபர்களுக்கு உணவளிப்பதில் (யோவான் 6). பிறவிக்குருடனை குணப்படுத்துவதிலும் (யோவான் 9). மேலும் லாசரை உயிரோடு எழுப்புவதிலும் (யோவான் 11) காணப்படுகிறது. கடவுளின் சந்திப்பை பெற்றவர்கள் எல்லாம் ‘ஓரங்கப்பட்டபட்டவர்கள்’, ‘நிராகரிக்கப்பட்டவர்கள்’, ‘முகவரியற்றவர்கள்’, ‘மதிப்ப ற்றவர்கள்’ ஆனால் அவர்களுக்கு தன் கருணையை வழங்குகிறார். இதுதான் மனிதனிடம் இருக்க வேண்டிய ஊழியம். மனிதம் என்பது இரக்கத்துடன் செயல்படுவது, பலவீனமானவர்களை கவனிப்பது, சுயநலத்தை விட மற்றவர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பது, இதுவே கிறிஸ்துவின் வாழ்க்கையின் சாரம்சமாகும். கடவுளின் மகிமையை அவருடைய பிரம்மாண்டம் வெளிப்படுத்தவில்லை மாறாக தொழுவத்தில் குழந்தையாய் அடைந்த பாதிப்பிலும் வாழ்வின் பகுதிகளில் வேலைக்காரனைப் போன்ற தாழ்மையில் மற்றும் சிலுவையின் துன்பத்திலும் கடவுளின் மகிமை வெளிப்படுத்தப்பட்டது.

கிறிஸ்மஸ் செய்தியை வாழ்வது :

கிறிஸ்துவின் அன்பை பிரதிபலிக்கும் நடைமுறை வழிகள்

இந்த கிறிஸ்துமஸில் தாழ்மை, இரக்கம், பெருந்தன்மை ஆகியவற்றை கொண்டு கிறிஸ்மஸ் காலத்தின் உண்மையான செய்தியை வெளிப்படுத்துவோம். பணம்

சார்ந்த கொண்டாட்டங்களில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக அர்த்தமுள்ள உறவுகளுக்கும், எளிய மகிழ்ச்சிகளுக்கும் முன்னுரிமை கொடுப்போம். ஒதுக்கப்பட்டவர்களுடன் நேரம் செலவிட்டு தேவைப்படுபவர்களுடன் நம்முடைய ஆசீர்வாதத்தைப் பகிர்ந்து கொள்வோம். கிறிஸ்துவின் அன்பை பிரதிபலிக்கும் கூட்டுறவை உருவாக்குங்கள். அண்டை வீட்டாருக்கு உதவுவது. தொண்டு நிறுவனுங்களுக்கு ஆதரவு கொடுப்பது, தனிமையில் இருப்பவர்களை சந்திப்பது போன்ற கருணைச் செயல்கள் கடவுளின் ஒளியை பிரதிபலிக்கும் சக்திவாய்ந்த நினைவுகளாக மாறும்.

நாம் நேசிக்கிறவர்களுடன் இணைந்திருப்பதிலும். முரண்பாடுகளைக் களைவதிலும், மன்னிப்பை கொடுப்பதின் வழியாகவும், கிறிஸ்துவின் அவதாரத்தை கொண்டாடுங்கள். அமைதி மற்றும் நீதியை ஊக்குவிக்கும் இறை வார்த்தைகளோடும், ஜெபத்தோடும், செயல்களோடும் கிறிஸ்துவின் வாழ்க்கை மற்றும் ஒளியை வெளிப்படுத்துவோம்.

ஏதேன் தோட்ட கனியின் சதையையும் சாறையும் உண்டவன் பாவியானான்.

கொல்கதா மரத்தின் கனியின் சதையையும் சாறையும் உண்பவன் பரிசுத்தமாவான்

சங்கீதம் பாடுவோம் - 5

கிறிஸ்து பிறப்பு ஸ்பெஷல்

Rev. இன்பராஜ்
Tamil Methodist Church,
Jabalpur

இந்த சங்கீதமானது, கடவுளின் மகிமையை படைப்பின் வழியாகவும், அவருடைய பரிபூரண வார்த்தை, வாக்கு மற்றும் அதின் செய்கைகள் வழியாகவும் வெளிப்படுத்துகின்றது.

இது நேரடியாக கிறிஸ்து பிறப்புடன் தொடர்புடையதில்லை, ஆனால் கிறிஸ்துவின் மாம்ச வருகையை, தேவனின் வெளிப்பாடாக கருதுவதன் மூலம், பல கிறஸ்து பிறப்பு செய்தியின் பார்வைகளை இதில் நாம் பார்க்கமுடியும்.

இச்சங்கீதம் 3 பிரிவுகளைக் கொண்டதாக அமைகிறது.

- **1-6 : வானங்கள் தேவனின் மகிமையை அறிவிக்கின்றன.**
- **7-11 : தேவனுடைய வார்த்தையின் முழுமையான வெளிப்பாடு**
- **12-14 : தேவனின் வெளிப்பாட்டின் தனிப்பட்ட தாக்கம்**

வசனம் 1-6: வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகிறது...

அவைகளுக்கு பேச்சுமில்லை, வார்த்தையுமில்லை .... ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியின் கடைசி வரைக்கும்

செல்லுகிறது.

நாம் வாழும் இப்பூமியைப் படைத்தவர் கடவுள் (ஆதி 1:1) ஆகவே இவ்வானம், பூமி, பூமியில் வாழும் உயிரினங்கள், பூமிக்கடியில் உள்ள நீர்வளங்கள், கனிம வளங்கள் அனைத்தும் இறைவனுக்கு சொந்தமானவை(சங் 24: 1)

கடவுளே இப்பூமிக்கு சொந்தக்காரர் என்ற எண்ணம் இஸ்ரயேல் மக்கள் மனதில் ஆழமாய் பதிந்திருந்தது.

இஸ்ரயேல் கருத்துப்படி உலக படைப்பு இறைபுகழைப் பாடுவதாக காட்டப்படுகிறது. படைப்புகள் அனைத்தும் தொடர்ந்து இடைவிடாது இறைவனை புகழ்ந்து கொண்டிருக்கின்றன. வானங்கள், வான்வெளி, பகல், இரவு, சூரியன், நட்சத்திரம், கோள்கள் etc., இவை அனைத்தும் இறைவனின் வியத்தகு கைவன்மையால் வனையப்பட்டன.அவைகள்சத்தமில்லாமல்இறைவனின் மகிமையை வெளிப்டுத்துகின்றன என்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் பிறப்பில், “படைப்பே” கிறிஸ்துவை சுட்டிக்காட்டியது. அதாவது பெத்லகேமின் நட்சத்திரம், வானசாஸ்திரிகளை இயேசுவிடம் கொண்டுசென்றது. (மத் 2: 9-10)

இங்கு “வானங்கள்” என்பது விண்ணவர் குழுவையும் குறிக்கலாம் (சங் 89: 5). இயேசுகிறிஸ்துவின் பிறப்பின் பொது வானதூதர்கள் பாடிய பாடல் (லூக் 2: 13-14) உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர் மேல் பிரியமும் உண்டாவதாக என்று பாடிய பாடல் வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்தியது.

வானங்கள் பொதுவாக கடவுளின் மகிமையை வெளிப்படுத்த அவர் தேர்ந்தெடுத்த இடமாக இருக்கிறது.

1. **Shining heavens (பிரகாசிக்கும் வானங்கள்)** - படைப்பின் மகிமையை வெளிப்படுத்ததுகிறது, இயேசுவின் பிறப்பின் போது வெளிப்படுத்தியது. (நட்சத்திரங்கள்)

2. **The singing heavens (பாடும் வானங்கள்)** - இயேவின் மனுவுரு ஏற்ப்பில் மகிமையை வெளிப்படுத்தின. (தூதர்கள்)

3. **The Darkend heavens (இருண்ட வானம்)** - இருள் சூழ்ந்த வானம் இயேசு சிலுவையில் அறையப்பட்டப் போது அவருடைய மகிமையை அறிவித்தன.

4. **The Opend heaven (திறந்த வானம்)** – திறந்த வானங்கள் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் விண்ணேற்றத்தில் அவரது மகிமையை அறிவித்தன.

5. **The fiery heavens (நெருப்பு வானம்)** – கடவுளின் இறுதி நாளில் (நியாயத்தீர்ப்பு) மகிமையை அறிவிக்கும்.

வானங்கள், விண்மீன்கள், சூரியன் இவை அனைத்தும்

வார்த்தையாலே பேசாமலே கடவுளின் மகிமையை வெளிப்படுத்துவது போல, கடவுளும் இறை இயேசுவில் தன்னை வெளிப்படுத்தி ஒளி வீசினார், நாமும் அதை போல இறை மகிமையை வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம். (யோவான் 1:4)

“மோல்ட்மான்” என்ற இறையியலார், ‘மனுவுரு ஏற்பை’, இறைவன் தம்மை தம் படைப்பில் முழுவதுமாக ஒருங்கிணைக்கிறார்” என்கிறார். இதன் அடிப்படையில் கிறிஸ்து மனுவுருவெடுத்தார் என்பதை விட கிறிஸ்து உலக படைப்போடு, இயற்கையோடு ஒன்றாகின்றார் என்பதே சிறந்த புரிதலாகும்.

ஆதி 2: 15-ல் இப்பூமியை உழுது பேணும்படி கூறுகிறார். மனிதர்கள் இவ்வுலவக படைப்போடு ஈடுபடுத்தி அதனை பயன்படுத்துவதன் மூலம் தானும் பண்பட வேண்டும் என விரும்புகிறார் இறைவன்.

மனிதருடைய வீட்டில் இறைமகன் இயேசு பிறக்காமல் விலங்குகளின் தொழுவத்தில் பிறக்கிறார். இயற்கையின் மத்தியில் வளர்ந்தார்.

வசனம்: 7–11: தேவனுடைய வார்த்தையின் முழுமையான வெளிப்பாடு

படைப்பும், நியாயப்பிரமாணமும் (தோரா) கடவுளை காட்டும் முதன்மையான வழிகள் என கருதப்பட்டது. நியாயப்பிரமாணத்திற்குள் திருச்சட்டம்..... ஒழுங்கு முறை..... நியமங்கள்..... கட்டளைகள்...... அச்சம்...... நீதிநெறிகள் அடங்கியிருக்கிறது.

திருச்சட்டம் கடவுளது பேரன்பையும் மாறாத தன்மையையும் வெளிப்படுத்தும் அவரது திருவார்த்தையே என்பதை மனதில்கொள்ள அழைக்கப்படுகிறோம்.

இயேசு கிறிஸ்து “வாழும் வார்த்தை” (யோ1: 1-14) அவர் நியாயபிரமாணத்தையும் தீர்க்கத்தரிசனத்தையும் நிறை வேற்றினார்.(ஏசா7:14;9:5-7)கடவுளுடையசத்தியத்தையும், கிருபையையும் வெளிப்படுத்தினார். மற்றும் அவருடைய வார்த்தையானது முழுமையானது, நம்பத்தகுந்தது, நேர்மையானது, ஒளிமயமானது, துல்லியமானது மற்றும் உறுதியானது என்று சங்கீதகாரன் விவரிக்கிறார்.

மேலும் கடவுளுடைய வார்த்தையின் பயன்களில் அறிவு, மகிழ்ச்சி, ஒளி மற்றும் வழிகாட்டுதல் அடங்கும் என்றும் அது தங்கத்தை விட விலைமதிக்கத்தக்கதாகவும் தேனை காட்டிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது.

இந்த பிறிஸ்து பிறப்பு காலங்களில் கொண்டாட்டங்களின் மத்தியில் வாழும் வார்த்ததையான இயேசு கிறிஸ்துவின் (கடவுளின்) சித்தத்தையும், நீதியான வாழ்க்கைக்கான வழிகாட்டுதலையும் நம்மில் வெளிப்படுத்த அழைக்கப்படுகிறோம்;.

வசனம் 12-14: தேவனின் ளிப்பாட்டின் தனிப்பட்ட தாக்கம்

வ 12-14: இந்த சங்ககீதம் மனித வாழ்க்கையின் வரம்புகளை உணர்ந்து, இறுதியில் கடவுளுடைய மகத்தவத்தை முன்னிட்டு ஒருவரின் வாழ்க்கையை தியானிக்கும் ஒரு தாழ்மையான ஜெபத்துடன் முடிவடைகிறது.

முறைவான பாவங்களுக்காக மன்னிப்பு கோருவதும், அறிகுறியாக பாவங்களிலிருந்து காக்குமாறு வேண்டுதலும் இடம் பெறுகிறது.

இறுதி வசனம், அவருடைய வார்த்தைகளும், சிந்தனைகளும் கடவுளுக்கு பிரியமாக இருக்க வேண்டும்

எனும் எண்ணத்தை வெளிப்படுத்துகிறது. கடவுளை ஒரு கன்மலையும் மீட்பராக அடையாளப்படுத்துகிறது.

“மீட்பர்” – (Hebrew : கோயல்) என்ற எபிரேய சொல்லுக்கு சாபம், அழிவு, சாவு முதலியவற்றிலிருந்து விடுதலை அளிப்பவர் என்பது பொருளாகும். இது, அடிமைதனத்திலிருந்து விடுதைலை பெற்றுக் கொடுத்த ஆண்டவரை இச்சொல் குறிப்பிடப்பட்டது (யாத் 6:6, 15:13, ஏசா 14: 14) இறுதியாக, பாவங்களிலிருந்து விடுதலை பெற்றுதந்ந இயேசு கிறிஸ்துவே மீட்பர் (மத் 1: 21,ரோ 3: 23 -24, மாற் 10: 45, கலா 3:13)

உலக மீட்புக்காக ஏற்பட்ட மெசியாவின் வருகை மானுடத்திற்கும், படைப்பு அனைத்திற்கும் மீட்பு தரக்கூடிய ஒரு மாபெரும் நிகழ்வாகக் கருதப்பட்டது. “பின்பு நான் புதிய வானத்தையும், புதிய பூமியைம் கண்டேன்” (வெளி 21:1) மானுடமும், படைப்பும் பெறவிருந்த விடுதலையை இது குறிக்கிறது.

அதே விடுதலை எண்ணத்தையும் தீர்க்கர் ஏசாயா இவ்வாறு குறிப்பிடுகின்றார் (ஏசா 11:6) “அந்நாளில் ஓநாய் செம்மறியாட்டு குட்டியோடு தங்கியிருக்கும், கன்றும் சிங்க குட்டியும் கொழுத்த காளையும் கூடி வாழும். பச்சிளம் குழந்தை அவற்றை நடத்தி செல்லும்.”

ஆக, மானுடத்தின் தவறால் பாதிக்கப்பட்டிருந்த இயற்கையும், மனிதரும் இயேசு கிறிஸ்துவின் மீட்பால் மீண்டும்தங்கள்பழையதோழமைநிலைக்கும்,சுமூகமான உறவுக்கு திரும்பும் நம்பிக்கையை வேதத்தில் காண்கிறோம். இத்தகைய சிந்தனையின் பிரதிபலிப்புதான் (ரோ 8: 22) படைப்பு பேராவலோடு காத்திருக்கிறது.... படைப்பு அனைத்தும் ஒருங்கே

பேறுகால வேதனையுற்று தவிக்கின்றன என்கிறார் பவுல்.

1970 -ல் சுற்றுசூழலின் பாதுகாவலராக அறிவிக்கப்பட்ட புனித பிரான்சிஸ் அசிசியார் இவ்விதமாக கூறுகிறார் “ஒவ்வொரு படைப்புமே இறைவனை பிரதிபலிக்கும் கண்ணாடி. இவைகளை நாம் சரியான முறையில் அணுக வேண்டும்.அவை இறைவனிடம் இட்டு செல்லும். படைப்பனைத்துமே இறைவனுடைய அருள் நிறைந்தனவாக இருக்கின்றன” என்கிறார்.

இந்த சங்கீதம் கடவுளை படைப்பாளராகவும், சட்ட மேதாவியாகவும், மீட்பராகவும் ஆராதிக்க அழைக்கின்றன. அது கடவுளின் வெளிப்பட்டை சந்தோஷமாக கொண்டாடவும், அவருடைய உண்மையுடனும், சத்தியத்துடனும், வாழ அறைக்கூவல் விடுகிறது.

“வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் கிறிஸ்து பிறப்பு நல் வாழ்த்துக்கள்

கிறிஸ்மஸ் ....
கிறிஸ்துவை நாம்
தரிசிப்பது மட்டும் அல்ல;
கிறிஸ்துவின் தரிசனத்தையும்
நாம் தொடர்வது .....

எதற்காக நான் பிறந்தேன்

எதற்காக நான் பிறந்தேன்?
சர்வாதிகாரத்தை ஒழித்து....
பொதுவுடமை சமுதாயத்தை படைக்கவும்...
முதலாளித்துவத்தை ஒழித்து..
தொழிலாளித்துவத்தை தூக்கி
நிறுத்தவும்....
உலகத்தில் நான் உதித்தேன்...!
அநீதியை, நீதியாக்கவும்... விளிம்பு நிலை
மானுடத்தின் விலா எலும்பை
நிமிர்த்தவும்...
பூமியில் நான் புதிதாய் பிறந்தேன்...!

மடமை மதத்சட்டங்களை உடைத்து...
இறையியலை எளிமையாக்கி.. மெய்யியல்
பிணைந்த இறையியல் படைக்க... மேலே
இருந்து கீழே வந்தேன்!
பெண்ணில் கருவறையில்.. மாதிரி
மனிதனாய் கருவானேன்... கல்லறையில்
மகிமைக் கடவுளாய் உருவானேன்...!
என் பிறப்பை ஏன் ஒரு நாள் பண்டிகை
ஆக்கினீர்கள்? * உங்கள் வாழ்வு முழுதும்
நான் செய்த... ஆன்மீகப் புரட்சியை ஏன்
அமல்படுத்தவில்லை?
என் வருகைக் காலங்களில்...
துதிப்பாடல்களை பாடும் நீங்கள்...
என் தாய் மரியாளின் துதிப்பாடலின்
வர்க்கச் சிந்தனையை
வாழ்வாக்கவில்லை!

நான்... பூமிக்கு வந்தது... பலி, ஒளி
மட்டுமல்ல... வழியுங்கூட..!
ஆனால்.. என் பொதுவழியை... தனியார்
வழியாக்கி தவறு செய்கிறீர்கள்!
என் பகிர்தலை... தனியுடைமையாக்கி
சுவிசேஷ சுரண்டல் செய்கிறீர்கள்...
என் அன்பை ஆலய செய்திகளில் மட்டும்
வழங்கி... அயலானை வெறுத்து அரசியல்
செய்கிறீர்கள்..
கந்தல் அணிந்த, என் எளிமையை
கண்டுகொள்ளாமல்...
போத்தீசிலும், அமேசானிலும், ஆடைகள்
வாங்கி அமர்க்களம் செய்கிறீர்கள்...

சிலுவைக்கே சீரியல் செட்டுகள்
போட்டுவிடும்... உங்கள் வாசலில்
தொங்கும் LED வால் நட்சத்திரங்களை
விட... வான வல்லுநர்கள் ஆய்வு செய்த
வால் நட்சத்திரங்களே இறையியல்
சார்ந்தவை!
கேக், கோக், பிரியாணிகளை விட...

நான் பிட்டுத் தந்த வார்த்தை
மன்னாக்களே, வாழ்வுக்குகந்தவைகள்!

கிறிஸ்மஸ் மரங்களை அலங்கரிக்கும்
நீங்கள்... வீதியில் வெட்டப்படும்
மரங்களைக் கண்டு விலகிச்
செல்கிறீர்கள்!
சத்திரங்களை எல்லாம் நீங்கள் 99
வருடங்களுக்கு லீஸ் விட்டு விட்டதால்
தான். மாட்டுத் தொழுவத்திலேயே
நான்... மறுபடி மறுபடி பிறந்து
கொண்டிக்கிறேன்.
இருளில் பிறந்த நான் ஒளியோடு
விழித்துக் கொண்டிருக்கிறேன்.. ஒளியில்
பிறந்த நீங்கள் இருளோடு உறங்கிக்
கொண்டிருக்கின்றீர்கள்!

என் பிறப்பையும் என் இறப்பையும் என்
உயிர்தெழுதலையும்... சம்பிரதாயப்
பண்டிகையாக்கிய நீங்கள்... என்
வருகையின் அர்த்தத்தை வடிகட்டி
விட்டீர்கள்!
பண்டிகைகளில் மட்டும் அதிகமாக கூடும்
நீங்கள்...அதன் பிறகு திருச்சபை
தேர்தல்களில் ஓட்டு போடுவதற்கு மட்டும்
உற்சாகமாய் கூடுகிறீர்கள்!
நான்... தேர்தல் வேட்பாளன் அல்ல...
தேடுகிற மீட்பாளன்..!
நான் பரிசுத்தவான்களின் கூட்டாளி
அல்ல... பாவிகளின் மீட்பாளி.!

நான் வந்த நோக்கம்.- ஆச்சாரம் உள்ள
ஆலய கிறிஸ்தவர்களுக்காக அல்ல...
ஆலயத்தின் கதவுகளில் ஆணிகள்
அறைந்த மார்ட்டீன் லூத்தர்களையும்...
வில்லியம் கேரிகளையும்..
சீகன்பால்குகளையும்... மரித்த
மிஷனரிகளை மறுபடியும் தேடுவதற்காக!
மீண்டும் மீண்டும் மெசியா என் பிறப்பின்
அர்த்தத்தை... பண்டிகைப் பலகாரங்களால்
மூழ்கடித்தீர்கள் என்றால்..
என் இரண்டாம் வருகை இன்னும்
தள்ளிப்போகும்.. பரலோகம் எள்ளி
நகைக்கும்..என்னை அனுப்பிய தந்தையின்
தத்துவ நோக்கம் தவறாகிவிடும்.!
என் பிறப்பை நீங்கள் அர்த்தப்படுத்த
வேண்டுமென்றால்.. விட்டை விட்டும் வீண்
சம்பிரதாயங்களை விட்டும்... வெளியே
வாருங்கள்... கடைநிலை மக்களோடும்..
கையேந்தி பவன்களிலும்...
மருத்துவமனைகளிலும்.
சிறைச்சாலைகளிலும்... துயருறும் மக்கள்
குடிசை வாசல்களிலும்... தூளியில் நான்
துயரமுடன் ஆடிக் கொண்டிக்கிறேன்.
விலை அதிகமான வெள்ளி போளங்கள்
வேண்டாம்... வறுமை காரணமாக என்
தாயின் மார்பகங்கள் வற்றிப்
போனதால்... பாக்கெட் பால் படைத்தால்
போதும் உங்கள் பரலோகப் பாலகன்
பசியாற

சிலுவை சித்தர். **ஜோசப் மோகன்ராஜ் அடிகளார்**

நீங்கள்
இப்பத்திரிகையால்
ஆசீர்வதிக்கப்பட்டால்
பகிருங்கள். நாங்கள்
வெளியிடும் அனைத்து இதழ்களையும் பெற விரும்பினால்
+91 8668047378 என்ற Whats app எண்ணுக்கு < Seed > என
SMS அனுப்புங்கள்.

இது இலவசமாய் உங்கள் கரங்களில் கிடைத்தாலும்,

எங்கள் உழைப்புக்கு விலையாக ரூ **50**
நன்கொடையாக அளிக்கலாம். கட்டாயமல்ல..

ACCOUNT NUMBER: 0480053000011726
IFSC: SIBL0000480
ACCOUNT NAME: MERLIN S
BRANCH NAME : MARTHANDAM
BANK NAME: SOUTH INDIAN BANK

MERLIN S

UPI ID: merlin.kannanoor@okaxis

GPAY:
9486954577